பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 27 சனிக்கிழமை 10.06.2023 கதிர் 212

# பேச்சு திருப்தியில்லை

## ரணிலைச் சந்தித்த பின்னர் சம்பந்தன் கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் வியாழக்கிழமை நடைபெற்ற பேச்சில் திருப்தி இல்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இதுவரையில் தீர்வு தொடர்பாகப் பல ஒப்பந்தங்களும், தீர்வுப் பொதிகளும் தயாரிக்கப்பட்டபோதும் அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை, இந்த ஆட்சியாளர்கள்கூட அதனைச் செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

2

# இனி இது ரகசியம் அல்ல!

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு ஒன்று ஒரு பழமொழி உண்டு. ஜனநாயகக் கூட்டணி விடயத்தில் ரெலோவுக்கு இப்போது அதுதான் மிகச் சரியாகப் பொருந்தக்கூடும்.

ஜனநாயகக் கூட்டணியின் முகாமைத்துவச் சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறு தொடர்ந்து அதன் பங்காளிக் கட்சிகள் நீண்ட நாட்களாகவே வலியுறுத்தி வந்திருக்கின்றன. கடைசியாக அதன் கூட்டம் யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்டபோது, யாப்புத் தொடர்பாகப் பேசப்பட்டது. அதில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.சிறீகாந்தாவினால் பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, ஜனநாயகக் கூட்டணிக்கு தலைவர், செயலாளர் போன்ற பதவிகள் தேவையில்லை. முடிவுகளைத் தலைமைத்துவச்சபை ஒன்றே எடுக்கலாம், சுழற்சிமுறைத் தலைமைப் பதவியை விட்டுவிடலாம் என்ற முன்மொழிவை வைத்திருந்தார்.

சுழற்சிமுறைத் தலைமைப் பதவி என்றால் முதலில் யாரை நியமிப்பது, அப்படி நியமிக்கப்பட்டவர் பின்னர் அதிலிருந்து விலகாமல்விட்டால் என்ன செய்வது என்கிற பிரச்சினைகள் எல்லாம் இருப்பதாலும், தலைவர் என்று ஒருவரை நியமித்துவிட்டால் அவர் தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதாலும் இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. தலைமைத்துவச் சபைதான் என்றால் முக்கிய முடிவுகள் அனைத்தும் அந்தச் சபையில் அலசப்பட்டு அனைத்துத்

2

# ரணிலின் இந்த ஆட்சி இன்னும் ஒரு வருடம்கூட நிலைக்காது

## குமார வெல்கம எம்பி. ஆருடம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையிலான இந்த ஆட்சி இன்னும் ஒரு வருடத்திற்குக் கூட நிலைக்காது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.

நவலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பத்தரமுல்லையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களின் பிடிக்குள் இருப்பதனாலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தேசிய ஆட்சி ஒன்றை அமைக்க முடியாதுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தான் 40 வருடங்களாக ராஜபக்ஷக்களுடன் இருந்தார் எனவும், அதனால் இது தொடர்பில் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் தனக்கு ஏற்றவாறு அமைச்சரவையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையிலேயே ஜனாதிபதி தற்போது உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாட்டை தனியாக வழிநடத்திச்செல்ல முடியாது. இந்த ஆட்சி இன்னும் ஒரு வருடத்திற்கு கூட நிலைக்காது" என்றார்.

# மாவட்ட ரீதியான நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரம் அறிவிப்பு

இவ்வாண்டு வாக்காளர் எண்ணிக்கைக்கு ஏற்ப நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்படக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, 2023ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின்

2

# கொரோனா, டெங்கை அடக்க தனித்தனி குழுக்கள் நியமனம்

இலங்கைக்குள் கொவிட் - 19 பரவல் மற்றும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சர்கள் குழு மற்றும் நிபுணர் குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

2023 ஜூன் மாதம் 22 திகதியிட்ட எண். 23/இதர/026 இன் படி, அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான அமைச்சர்கள் குழுவில் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உட்பட 8 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

நாட்டில் கொவிட் -19 மற்றும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் குழு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற 11 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல

2

# தண்ணீர்க் கட்டணம் உயரும் அமைச்சர் ஜீவன் அறிவிப்பு



குடிதண்ணீருக்கான கட்டணமும் விரைவில் அதிகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் துறைசார் அமைச்சர் ஜீவன் தொண்டமான். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் மின் கட்டணம் அதிகரித்துள்ள நிலையில் நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படாததால் மாதம் ஒன்றுக்கு 425 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகின்றது. மக்களின் வரிப்பணத்தில் இருந்துதான் இதனை செலவிடுகின்றோம். இந்த விவகாரம் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளருடன் புதன்கிழமை கலந்துரையாடல் நடத்தப்பட்டது. நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படும். சமூர்த்தி பயனாளிகள், நலன்புரி உதவிகளைப்

2

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

புதிய கல்வியாண்டு - A/L 2025
திகதி : 11.06.2023 நேரம் : காலை 8.30
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன் (B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | அருண்குமார் (B.Tech Hons(Eng)<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri)<br>பவனீதன் (B.Sc in Agri) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.Sc) |
| விவசாய விஞ்ஞானம் | சாரங்கன் (B.Sc in Agri)<br>திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri) |
| புவியியல் | S.S.கோகில் (B.A, P.G.D.E, M.Ed) |
| ஊடகக் கற்கை | கஜிதரன் (B.A) |
| கணிதம் | கிரிசாந் |
| சித்திரம் | ஜெயந்தன் (B.A) |

(C-6696)

தொடர்புகளுக்கு : 077 017 5346

Techna
Smart thinking leads to innovate

TECHNA Technical Institute
A/L தொழினுட்பபிரிவு
077 170 35 49 வீரசிங்கம் மண்டபம், 3ம் மாடி யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2025
11.06.2023
(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

மாணவர்கள் ஏன் Techna தெரிவு செய்கிறார்கள்
» மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு
» தொடர்ச்சியாக வகுப்புகள் நடைபெறும் மாதந்த பரீட்சை அலகு
» பரீட்சை தவணை பரீட்சைகள் புள்ளிகளுக்கேற்ப Z-Score மூலமான தரப்படுத்தல்
» ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்
» அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்
» செய்முறை பயிற்சி வகுப்புகள்
» களப்பயணங்களை மேற்கொள்ளல்
» இறுதி பரீட்சைக்கான வினைத்திறனான தயார்படுத்தல்

எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுடபவியல் | M. விஸ்ணுதேவன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | S. மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | S. சக்தி |
| ICT | T. லவன் |
| விவசாய விஞ்ஞானம் | S. சஜீபன் |
| கணிதம் | T. சசிகரன் |
| புவியியல் | S.P. கரன் |

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தலைவர்களது சம்மதத்துடனும் முடிவுகள் எடுக்கப்படும் வாய்ப்பு அதிகம் என்பதாலும் இந்த முறையைப் பரிந்துரைத்தார் சிறீகாந்தா. எனினும் அது தொடர்பில் எந்த இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லைஎன்பதால் அடுத்த கூட்டத்தில் அது பற்றியும் வேறு பல விடயங்கள் பற்றியும் அடுத்த கூட்டத்தில் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பல மாதங்களாகியும் கூட்டம் கூட்டப்படவில்லை. எப்போதும் யாழ்ப்பாணத்தில் கூட்டத்தை நடத்தினால் கிழக்கில் உள்ளவர்கள் அதனைத் தவறாக நினைத்துக்கொள்ளக்கூடும் என்பதால் கிழக்கிலும் கூட்டத்தை நடத்தவேண்டும் என்பது உள்ளிட்ட பல காரணங்களைக் காட்டி கூட்டம் பின்தள்ளப்பட்டுக்கொண்டே வந்தது. அதற்கிடையில் நெடுங்கேணியில் சீனித் தொழிற்சாலை அமைவதில் ரெலோவின் பங்கு பணி தொடர்பில் தகவல்கள் வெளியானதும், அதனால் இந்தியா பலத்த அதிருப்தியடைந்தது மான சூழலில் அதுபற்றியும் பேசவேண்டியிருப்பதால் அவசரமாகக் கூட்டத்தைக் கூட்டும்படி பங்காளிக் கட்சித் தலைவர்கள் பல தடவைகள் வலியுறுத்தியும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வெளிநாடு சென்றுவிட்டார், சிறிகாந்தா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று ஒவ்வொரு சாட்டுக் கூறி கூட்டத்திற்கான திகதி குறிக்கப்படவேயில்லை.

கடைசியில் ஒருவழியாக ஜூன் 15 மட்டக்களப்பில் கூட்டத்தை நடத்த நாள் குறிக்கப்பட்டது. அதற்கான அறிவிப்பு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டது. அப்படிஅறிவிக்கப்பட்ட ஒரு மணி நேரத்திலேயே ஒரு மருத்துவர் அனைவருக்கும் அலைபேசியில் அழைத்து, கிளிநொச்சியை உருவாக்கிய தந்தையான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் 90ஆவது பிறந்த நாள் அன்று, அதனைப் பெரியளவில் கொண்டாட ஏற்பாடு செய்கின்றோம், நீங்கள் அனைவரும் தவறாது அதில் கலந்துகொள்ள வேண்டும் என்றுள்ளார். ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தை வேறொரு நாளுக்கு ஒத்திவைத்துவிட்டு அனைத்துத் தலைவர்களும் பங்கேற்கவேண்டும் என்ற மருத்துவரின் அன்புக் கட்டளையை மீற முடியாமல் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது கூட்டம்.

- இடிமின்னல் -

## பேச்சு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதியுடனான பேச்சு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுசுதந்திரம் அடைந்த தன் பின்னர் அனைத்தின மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன.

அதன்பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்கு முனைப்புக்களும் சர்வதேச அழுத்தங்களும் காணப்படுகின்றபோதும் அதனைச்செய்வதில் தாமதம் நிலவுகின்றது.

இதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புப்பேரவையாக மாற்றப்பட்டுவழிநடத்தல்குழு உருவாக்கப்பட்டு இடைக்கால அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது வரையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள்' எவற்றையும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் கோரி வருகின்றார்கள்.

அவர்கள் உள்ளக சுயநிர்ணயத்திற்கு உரித்துடையவர்கள். ஆகவே உரிய தீர்வினை வழங்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும். தற்போதைய ஆட்சியாளர்கள் தீர்வினை வழங்கு-வதற்கான முனைப்புடன் செயற்படுவதாகக் கூறினர். ஆனால் தற்போது வரையில் அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவில்லை. காலதாமதம்தான் ஏற்படுத்தப்படுகின்றது - என்றார்.

## மாவட்ட .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எண்ணிக்கையின்படி, கொழு-ம்பு மாவட்டத்தில் இருந்து அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அந்த எண்ணிக்கை 19.

திருகோணமலை மாவட்டத்தில் மிகக்குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள், அந்த எண்ணிக்கை நான்கு.

கம்பஹாவிலிருந்து 18 பேரும், களுத்துறையில் இருந்து 10 பேரும், கண்டியில் இருந்து 12 பேரும், குருநாகலில் 15 பேரும், இரத்தினபுரியில் 11 பேரும், காலியில் 9 பேரும், மாத்தளையில் இருந்து 5 பேரும், நுவரெலியாவில் இருந்து 8 பேரும் தெரிவு செய்யப்படுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, அம்பாந்தோட்டை, திகாமடுல்ல மற்றும் யாழ்ப்பாணத்தில் தலா 7 பேரும், வன்னி மாவட்டத்தில் இருந்து 6 பேரும், மட்டக்களப்பில் இருந்து ஐந்து பேரும், புத்தளத்தில் இருந்து 8 பேரும், அனுராதபுரத்தில் இருந்து 9 பேரும், பொலன்னறுவையில் இருந்து 5 பேரும், பதுளையில் இருந்து 9 பேரும், மொனராகலையில் இருந்து 6 பேரும், கேகாலையில் இருந்து 9 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## கொரோனா, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தலைமையிலான நிபுணர் குழுவில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.கொடிப்பிலியாராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.எம். அர்னோல்ட், தொற்று நோய்கள் பிரிவுப் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன, விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம, சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு வைத்தியத் துறையின் பேராசிரியர் நீலிகா மாளவிகே, கலாநிதி உபுல் திஸாநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

அந்தக் குழுவின் இணைப் பாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் புத்திகா எஸ்.கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இந்த நிபுணர் குழுவிற்கு உதவுவதற் காக மாகாண மட்டத் தில் 9 உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மாகாண பிரதம செயலாளர் தலைமையிலான குழுவில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர், உள்ளூராட்சி ஆணையாளர்கள், முப்படைகளின் உறுப்பினர்கள், சிரேஷ்ட பிரதிபொலிஸ் மா அதிபர்கள், மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொவிட் - 19 மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அமைச்சர்கள் குழு நேற்று (09) முற்பகல் நாடாளுமன்றத்தில் குழுத் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கூடியது.

இந்த நிகழ்வுக்கு டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளும் அழைக்கப்பட்டதுடன், நாட்டில் சுகாதாரப் பொறிமுறையானது முறையாகச் செயற்படுகின்ற போதிலும், மாகாண மட்டத்தில் மக்களைத் தெளிவூட்டும் துரித வேலைத்திட்டம் ஒன்றின் அவசியம் குறித்தும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (13) காலை நிபுணர் குழுவைசந்திப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்காக மாகாண பிரதம செயலாளர்களை அழைத்து மாகாண மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்திட்டத்தை தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (02)

## தண்ணீர்க் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெறுபவர்கள் அந்தக் கட்டண உயர்விலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். அதிகமாக நீரைப் பயன்படுத்தும் 20வீதமானவர்களுக்குத்தான் விலை உயர்வு தாக்கமாக அமையும் - என்றார் அவர்.

தனது உரையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது -

எனது அமைச்சு தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரால் புதன்கிழமை கேள்வி யொன்று எழுப்பட்டிருந்தது. அவ்வேளையில் நான் சபையில் இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசமைக் கமைய இடம்பெற்ற முக்கிய கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்தேன். அந்த கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் தான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பட்டுள்ளது. பதில்களை நாம் சபையில் சமர்ப்பித்திருந்தோம். அப்படி இருந்தும் துறைசார் அமைச்சர் ஏன் சபையில் இல்லை என கேள்வி எழுப்பட்டுள்ளதுடன், அரசியல் நாகரீகம் அற்ற வகையில் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

வாக்கு வேட்டைக்காக நான் அமைச்சு பதவியை ஏற்கவில்லை. நான் இந்த நாட்டை நேசிக்கும் ஓர் இளைஞன். நாட்டை முன்னோக்கிகொண்டுவரவே நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். எனவே, பொறுப்பிலை என கூறுவதை ஏற்க முடியாது.

நாட்டில் கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி காலங்களில் நாம் மக்களுடன் இருந்தோம். மாறாக காட்டுக்கு சென்று மிருகங்களை படம் பிடிக்கவில்லை. எனவே, எல்லா விடயங்களையும் அரசியலாக்குவது கீழ்த்தரமான செயற்பாடாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் பதுளையில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார். மக்களும் பங்கேற்றிருந்தனர். ஆனால் எதிர்க்கட்சி தலைவர் அதில் பங்கேற்கவில்லை. மன்னிப்பு கோருமாறு வடிவேல் சுரேஷ் வலியுறுத்தினார். அந்த மன்னிப்பு இன்னும் கேட்கப்படவில்லை. ஆகவே கண்ணாடிவீட்டுக்குள்இருந்து கொண்டு கல்லெறிய முற்படக்கூடாது.

நல்லாட்சியில் வீடமைப்புதுறை அமைச்சராக சஜித் பிரேமதாசதான் பதவி வகித்தார். ஆனால் தோட்ட வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கு அவர் முன்வரவில்லை. நல்லாட்சியில் கட்டப்பட்ட வீடுகளுக்கு கூட நான்தான் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்து வீட்டு திட்டத்தை முழுமைப்படுத்தினேன். தவறு செய்து வெல்வதற்கு பதிலாக சரியானதை செய்துவிட்டு தோல்வி அடைந்தால்கூட பரவாயில்லை.

அதேவேளை, அநாகரீகமான அரசியல் விமர்சனங்களை கைவிடுமாறு நான் கூறியிருந்தேன். ஆனால் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மறைந்ததலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு முத்திரை வெளியிடுவது வெட்கக்கேடு எனக் கூறியுள்ளார். 3 லட்சம் பேருக்கு முகவரி பெற்றுக் கொடுத்து, சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்த ஒருவரை இப்படி விமர்சிக்கக்கூடாது. கண்டியில் இடம்பெற்றுள்ள காணிமோசடியுடன் இவருக்கு தொடர்பு உள்ளது - என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622


# விமானங்களை உடைக்கும் மையம் மத்தளவில் அமைப்பதற்குத் திட்டம்

### வருவாயை அதிகரிக்க புதிய வழி தேடுகின்றனர் அதிகாரிகள்

மத்தள விமான நிலையத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக அங்கு விமானங்களைஉடைத்துப்பாகங்களாகப் பிரிக்கும் மையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக விமான நிலையயங்கள் மற்றும் விமான சேவைகள் அமைப்பின் தலைவர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

மத்தளவின்வருவாயை அதிகரிப்பதற்காகப் பல புதிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

விமான நிலையத்தின் பயன்பாட்டை அதிகரிக்க, விமான நிறுத்தம், பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும்சீரமைப்பு(எம்ஆர்ஓ) மையம் மற்றும் சரக்கு பரிமாற்றம் உள்ளிட்ட பல புதிய நடவடிக்கைகளுக்கு ஆட்சியாளர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அமைப்பின் 2022 ஆண்டறிக்கையில், விமானங்களைப் பிரித்துப் பாகங்களாக்குதல் மற்றும் மறுசுழற்சி செய்வதும் ஒரு நம்பிக்கைக்குரிய வருவாய் ஈட்டும் வழியாகும் என்று தெரிவித்துள்ளார்..

மத்தல விமான நிலையம் மார்ச் 18, 2023 அன்று 10 வருடங்களைக் கடந்தது. எனினும் அதன் மூலம் நாட்டுக்கு வருமானம் எதுவும்கிடைக்கவில்லை. கடந்த வருடம் விமான நிலையம் 11,577 பயணிகளைக் கையாண்டுள்ளது, இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 65 சதவீதம் குறைவு, சரக்குக்கையாளுகையும் 96 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.




# ரெலிக்கொம்மை தனியார்மயப்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகாது

### நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுவுடன் முரண்படுகிறது ஆளும் தரப்பு

ஸ்ரீலங்காரெலிகொம்நிறுவனத்தைத் தனியார்மயப்படுத்துவதுதேசியபாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என தேசியபாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை போதாமைகள் கொண்டது, முழுமையான ஆய்வுகளற்றது என்று ஆளும் தரப்புத் தெரிவிக்கின்றது. அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி ரெலிகொம்மை தனியார் மயப்படுத்துவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என்றும் அது கூறுகின்றது. எனினும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் பேசி இறுதி முடிவை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை, பல்வேறு விடயங்களை உள்ளடக்கியிருந்தாலும், அவதானம் செலுத்தப்பட்ட துறைகள் தொடர்பில் தர்க்க ரீதியான அல்லது அறிவியல் பூர்வமான தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் இல்லாமை, கடுமையான குறைபாட்டைக் காட்டுகிறது என்று ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, நாட்டில் தகவல் மற்றும் தொடர்பாடல்தொழில்நுட்பசேவைகளை வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடு, அந்த நிறுவனங்கள் தற்போது எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றன, தகவல் மற்றும் தொடர்பாடல் துறை தொடர்பான நிதித் தரவுகள், இத்துறை தொடர்பில் இலங்கையின் தேசிய இலட்சியம், அதனை அடைவதற்கான மூலதனத் திறன், அத்துடன் உலகப் போக்குகள் பற்றிய முறையான ஆய்வு மற்றும் பகுப்பாய்வும் இல்லாமல் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

மேலும், ஆட்சியாளர்கள் எடுத்துள்ள இந்தக் கொள்கை ரீதியிலான முடிவின்படி, ரெலிகொம் நிறுவனத்தை தனீயார் மயப்படுத்துவது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று ஆட்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். எனவே, இந்த அறிக்கை மற்றும் தகவல் தொடர்பாடல் துறையின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என ஆளும் தரப்பு தெரிவித்துள்ளது.

அரசு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாது, தனியார் துறையினருக்கு அந்த வாய்ப்பை வழங்குவதே தற்போதைய ஆட்சியின் கொள்கை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நல்லிணக்கத்துக்கான செயற்றிட்ட பணிகளைத் துரிதப்படுத்துங்கள்

## சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தல்



நல்லிணக்கத்துக்கான செயற்றிட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டங்கள் தயாரிப்பதைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லிணக்கத்துக்கான செயற்றிட்டம் தொடர்பில் வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

சட்ட வரைவு, நிறுவன நடவடிக்கைகள், காணிப் பிரச்சினைகள், கைதிகளை விடுதலைசெய்தல், அதிகாரப்பரவலாக்கம் ஆகிய 5 பிரதான பகுதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் இங்கு மீளாய்வு செய்யப்பட்டது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், தேசிய காணி சபையொன்றை நிறுவுதல் மற்றும் தேசிய காணி கொள்கையை உருவாக்குதல், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை மிகவும் திறம்படச் செயற்படுத்துதல், அதன் டிஜிட்டல் மயமாக்கல் செற்பாடுகளை நிறைவு செய்தல் மற்றும் இதுவரை தகவல் சேகரிக்க முடியாத காணாமல்போனவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பவற்றை ஸ்தாபித்தல் மற் றும் அது தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு எதிர்வரும் இரண்டு மூன்றுமாதங்களுக்குள்அவற்றைப்பூர்த்தி செய்து, அது தொடர்பான அறிக்கையை வழங்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், அரச துறையினரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகளை விடுவித்தல், மகாவலி காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கைதிகளின் விடுதலை மற்றும் பொதுமன்னிப்பு தொடர்பில் நீதி அமைச்சின் ஊடாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கம், மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மாகாண ஓம்புட்ஸ்மன் நியமனம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அநுரதிஸாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் மற்றும் தொடர்புடைய நிறுவன பிரதானிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் செயலாளர்கள் மற் றும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாண காணி ஆணையாளர்கள் ஆகியோர் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (02)

# 7 பொலிஸார் கைது

பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்த தொழில் பயிற்சி உத்தியோகத்தரின் இறப்புத் தொடர்பில் 7 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை ஜூன் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாளிகாவந்த நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் போதைப்பொருள்தடுப்புப்பிரிவின் (ஊேஹிய) பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர், சார்ஜென்ட் மற்றும் ஐந்து கான்ஸ்டபிள்களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில்உள்ளதொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவி முகாமையாளராகக் கடமையாற்றுபவர் 2023 ஜனவரி 10 மதிய உணவு நேரத்தில் உணவகம் ஒன்றிலிருந்து பணிக்குதிரும்பியபோது பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் அழைத்துச் செல்லப்பட்டார்.

போதைப்பொருள் தொடர்பான வழக்கு விசாரணைக்காகவே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

விசாரணையின்போது உடைந்த கண்ணாடி போத்தலால் பொலிஸ் அதிகாரி ஒருவரை அவர் தாக்க முயற்சித்தார் என்றும் அந்த மோதலில் பாதிக்கப்பட்ட நபர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டவரின் இறப்புக்குஅவர்மிகமோசமாகத்தாக்கப்பட்டதே காரணம் என மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

அவரதுஇறப்புக்குக்காரணமானவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

அதையடுத்து சம்பவத்தில் தொடர்புடைய ஏழு பொலிஸாரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

# 7 பாலியல் தொழிலாளர்களுக்கு வவுனியாவில் தொற்றுப் பரவல்

## தொடர்புடையவர்களை பரிசோதிக்க அறிவுறுத்து

வவுனியாவில் கைது செய்யப்பட்ட பாலியல் தொழிலாளிகள் 7 பேருக்கு பால்வினைத் தொற்று நோய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர் அவர்களுடன்பாலியல்தொடர்புவைத்திருந்தவர்களையும் உடனடியாக மருத்துவப்பரிசோதனைசெய்துகொள்ளுமாறு அதிகாரிகள் கோரியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பாலியல் தொழிலாளர்களிடம் மேற்கொண்ட மருத்துவபரிசோதனையில் 7 பேருக்கு கொனோறியா என்கிற ஆபத்தான பாலியல் தொற்று மற்றும் சிபிலிசு நோய் தொற்றுக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

இந்நோயானதுபாலுறவின்மூலம் தொற்றாளரிடம் இருந்து பிறருக்குப் பரவக்கூடியன. கைது செய்யப்பட்ட 7 பேரும் வவுனியா நகரம் மற்றும் தேக்கவத்தை பகுதியில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே இந்தப் பகுதிகளில் அவர்களுடன் பாலியல் தொடர்புகளைக்கொண்டிருந்தவர்கள் பால்வினைத் தொற்று நோய் தொடர்பான பரிசோதனைகளைச் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையில் எச்.ஐ.வி தடுப்பு பிரிவுக்கு சென்று தேவையானவர்கள் தம்மை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளமுடியும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (100)




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திருப்தியற்ற அரசியல்

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வியாழக்கிழமை நடத்திய பேச்சு திருப்தியில்லை என்று அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தர். தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிறார்கள் என்கிற தொணி அவரது வார்த்தைகளில் தெறிக்கின்றது. அந்த ஏமாற்றத்தை அவர் ரணிலுக்கு முன்பாகவுமே வெளிப்படுத்தியிருக்கிறார். டட்லி – செல்வாவில் தொடங்கி, 2023 மாசி 4 சுதந்திர தினத்திற்குள் தீர்வு என்கிற அறிவிப்பு வரையில் தமிழர்கள் ஏமாற்றப்பட்ட வரலாற்றை அவர் அந்தப் பேச்சில் பட்டியலிட்டிருந்தார்.

நீண்டகாலமாக சிங்கள ஆட்சியாளர்களை – குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை – நம்பியிருந்து ஏமாந்து போன விரக்தியை அவர் வெளிப்படுத்தினார். அரசுத் தலைவருக்கு முன்பாக இதுவரையில் பயன்படுத்தாத பல சொற்களை – உதாரணத்திற்கு இனப்படுகொலை செய்தீர்கள் என்பது உட்பட – பயன்படுத்தியே அவர் தனது விசனத்தை விரக்தியை முன்வைத்திருந்தார்.

தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு முழு உரித்தும் கொண்டவர்கள், இலங்கை ஆட்சியாளர்கள் அவர்களின் அந்த உரிமையை அங்கீகரிக்கத் தவறினால், வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரி நிற்பதைத் தவிரத் தமிழர்களிக்கு வேறு வழியில்லை என்பதையும் ஆணித்தரமாகச் சம்பந்தன் எடுத்துரைத்திருந்தார்.

தமிழர்கள் தொடர்ந்தும் இப்படிப் பேச்சு என்று ஏமாற்றப்படுவதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும் அவர் உணர்த்தியிருக்கிறார்.

2015ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் கூட்டை பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றியவர்களில் சம்பந்தனும் ஒருவர். ரணிலை ஒரு மிதவாதி, முற்போக்கானவர் என்று கருதியதன் அடிப்படையில் அவரை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெறமுடியும் என்று சம்பந்தன் நம்பியிருந்தார். இலங்கையின் ஒற்றையாட்சி முறையை ஏக்கிய இராச்சிய என்கிற வார்த்தை மாற்றத்தோடு ஏற்றுக்கொள்வதற்கும் பௌத்தத்திற்கே நாட்டில் முதலிடம் என்பதை அங்கீகரிப்பதற்கும்கூட அவர் தயாராக இருந்தார். அதனால் அவரது எதிர்க் கட்சியினரால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டதையும். தேர்தல் களத்தில் வாக்குச் சரிவு ஏற்பட்டதையும் தாங்கிக்கொண்டு தீர்வு என்கிற ஒரு நோக்கத்துக்காக அவர் ரணிலைப் பாதுகாப்பதில் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டுச் செயற்பட்டார்.

அப்படிப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தான் தலைமை அமைச்சராகப் பதிவியிலிருந்தபோது தீர்வை முழுமைப்படுத்த முடியாமல் போய்விட்டபோதும் அரசுத் தலைவராகப் பதவிக்கு வந்த பின்னர் தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அதனைச் செய்வார் என்று எதிர்பார்த்திருப்பார். அதுவும் நடக்கவில்லை என்கிற விரக்தியும் விசனமும் வியாழக்கிழமை பேச்சில் சம்பந்தரிடம் இருந்து வெளிப்பட்டன. அந்த விடயங்களையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இவையெல்லாவற்றுக்குப் பின்னரும் தீர்வு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து எந்த அசைவும், விட்டுக்கொடுப்பும் வெளிப்படவில்லை என்பதாலேயே இந்தப் பேச்சில் திருப்தியில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசசிங்க, அடிக்கடி ஒரு விடயத்தைக் கூறுவார். நானும் சம்பந்தரும் ஒரே காலத்தில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானவர்கள், எங்களது காலத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடவேண்டும், அடுத்த தலைமுறைக்கு இதனைக் கையளிக்கக் கூடாது என்று அவர் தெரிவிப்பார். ஆனால் செயலில் அவர் அதனைக் காட்டியதாக இல்லை. அதுவே இந்தத் தள்ளாத வயதிலும் சம்பந்தரைக் கலங்க வைத்துள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கைதுக்கு வைகோ கண்டனம் வெளியீடு



வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் ஜூன் 2 ஆம் திகதி மாலை மக்கள் சந்திப்புக்காகச் சென்ற, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது சிங்கள அரசின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தாக்கியதுடன், பொலிஸ் சீருடையிலிருந்த ஒருவர் துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டியிருக்கிறார்.

இலங்கை பொலிஸாரின் சாதாரண உடையில் வந்து தன்னிடம் வாக்கு-வாதத்தில் ஈடுபட்டனர் எனவும், தான் அடையாள அட்டையை காண்பிக்கக் கோரியதும் தன் மீது தாக்குதல் நடத்த அவர்கள் முயன்றனர் எனவும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் முறைப்பாடு தெரிவித்திருந்தார்.

ஆனால் இது தொடர்பாக ஊடகங்கள், இலங்கை அதிபர் மற்றும் பிரதமர் இருவரிடமும் கேள்வி எழுப்பிய போது, தங்களுக்கு எதுவும் தெரியாது எனப் பதில் அளித்தனர்.

இந்நிலையில் ஜூன் 7 ஆம் திகதி காலை, கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள வீட்டில் அத்துமீறி நுழைந்த பொலிஸாரின் பொன்னம்பலத்தை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக விளக்கம் அளித்துள்ள பாதுகாப்புத் துறை அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்ய பொன்னம்பலம் தடையாக இருந்தார் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியில் தமிழர்கள் மீதான சிங்கள அரசின் ஒடுக்குமுறை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே ஆயுதமுனையில் மிரட்டப்பட்டு இருக்கிறார். பின்னர் அவரைக் கைது செய்துள்ளனர்.

இலங்கை அரசின் இந்த செயல் கடும் கண்டனத்துக்குரியது.

கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஈழத் தமிழர்களின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பேரன் ஆவார். இவரது தந்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான குமார் பொன்னம்பலம் சிங்கள அரசின் சதியால் 2000 ஆம் ஆண்டு, ஜனவரி 5 ஆம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

தனது பாட்டனார் மற்றும் தந்தை வழியில் தமிழீழ மக்களின் அரசியல் உரிமைக்காகவும், இறையாண்மையை மீட்கவும் ஜனநாயக முறையில் இயங்கி வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் சிங்கள அரசால் குறிவைக்கப்பட்டிருக்கலாம் என்று ஈழத் தமிழர்கள் கவலை அடைந்துள்ளனர்.

இலங்கையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நிலை என்றால் சாதாரண தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எந்த உத்தரவாதமும் இல்லை என்பது இதன் மூலம் வெளி உலகிற்குத் தெரிகிறது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டு இருப்பதற்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிப்பதுடன், உடனடியாக இலங்கை அரசு அவரை விடுதலை செய்யவும் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது. (05)

## நாட்டின் வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்த தேசிய முன்மொழிவொன்றை துரிதமாக தயாரிக்குக

### ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு பணிப்புரை



இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகளை இலகுபடுத்தல் மற்றும் துரிதபடுத்தலுக்கான முன்மொழிவொன்றை விரைவாகத் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான குழுவின் செயற்திறன் மீளாய்வு கூட்டத்தின் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்படி அறிவுரைகளை வழங்கினார்.

இலங்கைக்குள் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான உகந்த சூழலை கட்டமைப்பதற்கான துரிதமானதும் மிக முக்கியமானதுமான தீர்மானங்களை விரைந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிற்குள் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இந்தக் கூட்டத்தின் போது ஆராயப்பட்டதோடு, தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான செயலகத்தின் பணிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இந்த செயலகத்தால் 2025 - 2030 காலப் பகுதியில் நிறைவுசெய்யப்பட வேண்டிய பணிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது.

இதன் பூர்வாங்க நடவடிக்கையாக, தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான செயலகத்தை நிதி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுப்பதற்கும் அதன் பணியாளர் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், தற்போது சுங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான செயலகத்திற்கு 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை, நிதி அமைச்சின் கீழ் கொண்டுவருதல் தொடர்பிலும், அதன் இணையத் தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கையிடல், கட்டமைப்பு தயாரித்தல் போன்ற தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு உயர்மட்ட அதிகாரசபையொன்று அவசியம் எனத் தனியார் துறைப் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். ஒவ்வொரு முகவர் நிறுவனங்களினதும் பொறுப்புகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு முறையான அறிக்கையிடல் பொறிமுறையொன்றை நிறுவுவதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம் தலைவர் கெனீசியஸ் பெர்னாண்டோ, மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவி கயானி டி அல்விஸ், இலங்கை வர்த்தக சபையின் உதவிச் செயலாளர் மனோரி திஸாநாயக்க மற்றும் தேசிய வர்த்தக வசதியளித்தல் தொடர்பான குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

## யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு தண்டப்பணம் விதிப்பு



யாழ்ப்பாணம், கன்னாதிட்டி சந்திக்கு அருகில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் தொடர்பான வழக்கில் வியாழக்கிழமை யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றம் உணவக உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள ஓர் உணவகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மே மாதம் 12ஆம் திகதி உணவக உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் கடையை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதாரப் பரிசோதகருக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, பொது சுகாதார பரிசோதகரால் கடை சீல் வைத்து மூடப்பட்டது.

இந்நிலையில், வியாழக்கிழமை குறித்த வழக்கு நீதிமன்றில் மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன், உணவக திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, கடையை மீள திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது. (05)





## பேராசிரியர் சி.மௌனகுருவின் அமுதவிழா மட்டு. நகரில் நேற்று

(பழுவூரான்)

கூத்தப் பெரியோன் பேராசிரியர் சி.மௌனகுருவைப் பாராட்டிக் கௌரவிக்கும் அமுதவிழா நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார முன்னாள் பீடாதிபதி பாலசுகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அமுத உரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸும், அமுதம் பகிரும் உரையினை பேராசிரியர் சி.மௌனகுருவும் நிகழ்த்தினர்.

அமுதவிழாவில் வெளியீடு செய்யப்பட்ட நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொண்டார். அத்தோடு நூல் அறிமுகவுரையினை மகுடம் சஞ்சிகை ஆசிரியர் வி.மைக்கல் கொலின் நிகழ்த்தினார்.

இதன்போது அமுதவிழா நாயகன் பேராசிரியர் சி.மௌனகுரு பல்வேறு பிரமுகர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவப்படுத்தப்பட்டார்.

## கல்முனை பிரதேச செயலக விவகாரம்:

# ஹரீஸ் எம்.பி., கலீல் ரஹ்மான் ஆகியோரை இடையீட்டு மனுதாரர்களாக ஏற்றது நீதிமன்று



(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் இடையீட்டு மனுதாரர்களாக ஏற்றுக்கொண்ட கல்முனை உப பிரதேச செயலக வழக்கில் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

கல்முனை உப பிரதேச செயலக தரமுயர்வு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் நீடித்து வரும் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேன்முறையீட்டு நீதிமன்றில் கல்முனை விவகாரம் தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருந்த வழக்கு புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அறிவிப்பு நீதிபதிகள் குழாமால் விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தாக்கல் செய்திருந்த வழக்கின் இடையீட்டு மனுதாரர்களாக கல்முனையை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.கலீலுர்ரஹ்மான் ஆகியோர் நீதிமன்றுக்கு தாக்கல் செய்திருந்த இடையீட்டு மனுவை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்ற குழாமுக்கு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கடந்த தவணையில் கோரிக்கை விடுத்திருந்த போது வழக்காளியான நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அந்த கோரிக்கைக்கு எதிராக தனது கடுமையான ஆட்சபனையை அன்று வெளியிட்டார். அத்துடன் இடையீட்டு மனுவை நீதிமன்றம் ஏற்கக்கூடாது என்றும் இடைக்கால தீர்வை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது வாதத்தில் நீதிமன்றுக்கு கடந்த தவணையில் போது முன்வைத்தார்.

எதிர்தரப்பினரிடமும், சட்டமா அதிபர் திணைக்களத்திடமும் இந்த இடை யீட்டு மனு தொடர்பில் வினவிய நீதிபதிகள் குழாம் இந்த இடையீட்டு மனுவை ஏற்பது தொடர்பில் ஜனாதிபதி சட்டத் தரணி சுமந்திரன் தரப்பினது ஆட் சேபனையை வழங்க ஒரு வார கால அவ காசமும் இடையீட்டு மனுதாரர்களின் ஆட்சேபனைக்கான பதிலை நீதிமன்றுக்கு வழங்க ஒருவாரம் அவகாசம் வழங்கியிருந்த நிலையில் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து இந்த இடையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சஞ்சீவ ஜெயவர்த்தன, பைஸர் முஸ்தபா உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகி வாதிட்டனர். இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் கோரியிருந்த இடைக்கால தீர்வுக்கும் தமது ஆட்சபனைகளை அவர்கள் தெரிவித்திருந்தனர். இதுவிடயமாக எழுத்துமூல ஆட்சபனை அறிக்கையை வழங்க இடையீட்டு மனுதாரர்களுக்கு ஒருவாரமும் அந்த அறிக்கைக்கு பதிலறிக்கை வழங்க கலையரசன் எம்.பி சார்பிலான சட்டத்தரணிகளுக்கு ஒருவார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் அடுத்த தவணை ஜூலை 12 இல் நடைபெறவுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் தமிழ் மக்களிடமும், முஸ்லிம் மக்களிடமும் பலத்த வாதபிரதி வாதங்கள் சில தினங்களாக இடம்பெற்றிருந்த நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## தேசிய சுற்றாடல் தினத்தில் சாய்ந்தமருதில் மரம்நடுகை



(நூருல் ஹுதா உமர்)


தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட கடற்கரையோர பிரதேசங்களில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக பொறியியலாளர் எம். சி .கமால் நிஸாத்தும், அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட் , கரையோர பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.நுஸ்ரத் அலி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக சாய்ந்தமருது ஹெப்பி கிட்ஸ் ஹோம் முன் பாடசாலை வளாகத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.டி.சுதாகரன், முன் பிள்ளைபருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. திருப்பதி, சமூக பாதுகாப்பு சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம். முஸ்பீக், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எப்.சுமையா பானு, ஹெப்பி கிட்ஸ் ஹோம் முன்பாடசாலை தலைமை ஆசிரியை ஜுனைதா மசூத், ஹேப்பி கிட்ஸ் ஹோம் முன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## டெங்கு பரவலைத் தடுப்பதற்கு காரைதீவு வீடுகளில் சோதனை





(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு, ஜூன் 10

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனன் வழிகாட்டலின் கீழ் காரைதீவு 02 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழு ஒன்று டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் முகமாக வீடு வீடான களப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இருந்தனர்.

இந்த களப்பரிசோதனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம். பைசால் முஸ்தபா, எம்.எம்.எம்.சப்னூஸ், டெங்கு கட்டுப்பாட்டு கள பரிசோதகர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டதுடன் இதன்போது வெற்று காணிகள் பராமரிக்கப்படாத கிணறுகள் வீடுகள் என்பவற்றிற்கு சிவப்பு அறிக்கை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)




## கிணற்றில் விழுந்து உயர்தர மாணவி பலி



புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவுக்குற்பட்ட புன்னைநீராவி பகுதியில் வீட்டில் இருந்தநிலையில் கானாதகாரணத்தால் கடந்த புதன்கிழமை தேடிய நிலையில், அன்று இரவு தோட்டக்கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டு இறந்த மாணவி க.பொ.தா உயர் தரம் கற்றுவருபர் பாவலன் பானுசா (வயது 18) என அறியவந்தது.

சடலம் பிரேதபரிசோதனைக்காக கிளிநொச்சிவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேலதிக விசாரனைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05 - 113)

# அரச அலுவலகங்களுக்காக வீணடிக்கப்படுகின்றது பணம்

## சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டு



அனைத்து அரச நிறுவனங்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரமே செயற்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களும் வரி செலுத்துவோரின் பணத்தாலேயே பராமரிக்கப்படுவதாகத் தெரிவித்த விஜேசிறி, அரசசேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு சொந்தமான கட்டடத்துக்கு மாதாந்தம் 13 லட்சம் ரூபா, தேசிய லொத்தர் சபைக்கு மாதம் 65 லட்சம் ரூபா, கொள்ளுப்பிட்டியில் உள்ள மின்சார அமைச்சுக்கு மாதம் 20 லட்சம் ரூபா, மின்சார சபை நகர அலுவலகத்துக்கு மாதம் 20 லட்சம் ரூபா மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கட்டடத்திற்கு மாதாந்தம் 20 லட்சம் ரூபா என பணம் வீணடிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (05)

# எதிர்கால வேலைத் திட்டத்தை வலுப்படுத்த சுகாதார மாநாடு

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்பு





(ஹூஸ்பர்)

சுகாதாரத் துறையில் எதிர்காலவேலைத்திட்டத்தை வலுப்படுத்தும் நோக் கில் சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண சுகாதார மாநாடு நாரா ஹேன்பிட்டியில் உள்ள தேசிய இரத்த மாற்று நிலையத்தின் கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் நடைபெற்றது.

இதன் போது சுகாதார துறையில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இம்மாநாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையில் காணப்படும் பிரச்சினைகள், மருந்துப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளைத் துரிதகதியில் நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தியதோடு, அதற்கு உடனடித் தீர்வு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார். (05)

# பக்கவாதம் தொடர்பான விழிப்புணர்வு கலந்தாய்வு







(பாறுக் ஷிஹான்)

பாரிசவாதம்தொடர்பான விழிப்பூட்டல் கலந்துரையாடல் கல்முனை நீதிமன்ற கட்டடத் தொகுதியின் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம் கல்முனை சட்டத்தரணிகள் சங்கதலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானதுடன் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம் முஹம்மட் றியால், கல்முனைநீதிமன்றநீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் ,அரச சட்டவாதிஎம்.லாபீர்ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் முதலில் மத அனுஸ்டானம் இடம்பெற்றதைத் தொடர்ந்து கல்முனை சட்டத்தரணிகள் சங்க தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையுரை மற் றும் கல்முனை மேல் நீதி மன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி உரையுடன் இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமானது.

தொடர்ந்து இந்தக் கலந்துரையாடலில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி என். இதயகுமார் வளவாளராகக் கலந்து கொண்டு பக்கவாதம் என்றால் என்ன?, ஆரோக்கியமான உடற்பயிற்சி செய்வது ஏன்?, உணவுப்பழக்கவழக்கங்கள் பேணப்படுவது எவ்வாறு?, நீண்ட நேர தூக்கம் மன அழுத்தம் தொடர்பான விழிப்புணர்வு, பக்கவாதம் நோயின் தன்மை, அதற்கான சிகிச்சை முறைகள், தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், கலந்துரையாடலில் நோயாளி ஒருவரும் அழைக்கப்பட்டு அவரது அனுபவ பகிர்வும் அவையோருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் சட்டத்தரணிகள் நீதிமன்ற பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் கல்முனை சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சட்டத்தரணி ரோஸன் அக்தரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிங்கப்பூர் தேர்தலில் களமிறங்கும் தமிழன்



சிங்கப்பூரில் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சரான தர்மன் சண்முகரத்தினம் களம் இறங்கவுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியை தாய் தந்தையரின் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

சிங்கப்பூரின் மூத்த அமைச்சரான தர்மன் சண்முகரத்தினம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மக்கள் செயல் கட்சியில் இருந்து பதவி விலகல் செய்வதுடன் தனது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார்.

அவர் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் துணைத் தலைவராக பதவி வகித்து வருகிறார்.

மேலும், பொருளாதார மேம்பாட்டு வாரியத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் அவர் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில், சிங்கப்பூரில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இவர் களமிறங்கவுள்ளமையால் அமைச்சுப் பதவியிருந்து மட்டுமன்றி, பிற பொறுப்புகளில் இருந்தும் அவர் இராஜினாமா செய்யவுள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (05)

# விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களுக்கு மேலும் சலுகை

## விவசாய அமைச்சர் உறுதி

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அரவீர தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அடுத்த வாரம் முதல் யூரியா உரம் மூடையொன்றை 9 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது 19 ஆயிரத்து 500 ரூபா வாக விற்பனை செய்யப் படும் எம்.வி.பி உரம் மூடையொன்றின் விலையை 4 ஆயிரத்து 500 ரூபாவால் குறைத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அடுத்த வாரம் முதல் யூரியா உரம் மூடையொன்றை 9 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதுடன், உர நிவாரணமாக வழங்கப்படும் நிதியை அடுத்த போகம் முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவது தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் விவசாயிகள் தமக்குத் தேவையான உரங்களை எந்தப் பிரதேசத்திலும் கொள்வனவு செய்து கொள்ள முடியும் எனவும், 25 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்த கேள்வி கோரல் பத்திரம் கோரப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அரவீர மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மட்டக்களப்பு கடற்றொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் வழங்குதல்!





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பில் தெரிவுசெய்யப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது வியாழக்கிழமை மட்டக்களப்பு, பாலமீன்மடு மீனவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம் பெற்றது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சுதாகரன் சியாந்த் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதற்கட்டமாக 86 மீனவர்களுக்கு தலா 75 லீற்றர்படி இலவச மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா, மாவட்ட மீனவர் சம்மேளன தலைவர் நற்குணநாதன் பத்மநாதன் மற்றும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் என்போர் கலந்துகொண்டனர்.

கடற்தொழில் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவின் வழி காட்டலில்கீழ் சீன அரசின் நிதியுதவியின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 1,796 கடற்தொழிலாளர்கள் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தெரிவுசெய்யப்பட்ட மீனவர்களுக்கான இலவச எண்ணை விநியோக திட்டம் மட்டக்களப்பு மாவட்டதின் பல்வேறு பகுதிகளிலும் கட்டம் கட்டமாக தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக்கான நிலையத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கல்



யாழ். பல்கலைக்கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில், பெண்களுக்கான உதவி வழங்கும் திட்டம் நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பால் நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரின் பங்குபற்றலுடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் மூன்று பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் துறைசார்ந்த பயிற்சியுடன் பசு மாடுகளும், வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கான ஆயத்தப்படுத்தலுக்காகவும், நிகழ்வுகளில் வாசிப்பதற்காகவும் யுத்தத்தால் இருகண்களும் முற்றாகப் பார்வை இழந்த இரு பெண்களுக்கு கிற்றார் மற்றும் ஒகண் இசைக் கருவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையத்துக்கு தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

நன்கொடையாளர்களையும், சேவை நாடும் மகளிரையும் இணைக்கும் முகமாக இடம்பெற்ற இந் நிகழ்வில், ரூபா 5 லட்சத்து 56 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது குறித்த பயனாளிகளுக்கான ஒப்பந்த கடிதங்களும், குறித்த உதவிகளை நல்கிய நன்கொடையாளர்களுக்கான நன்றி தெரிவித்தல் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக்கான நிலையத்தின் அங்கத்தவர்கள், வன்னி விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், மற்றும் துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (05 113)

# ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த 72 வயது நபரின் வங்கி அட்டையை மோசடி செய்த யுவதி கைது

## முகப்புத்தக தொடர்பால் ஏற்பட்ட விபரீதம்

ஆஸ்ரேலியாவில் இருந்து வந்த 72 வயது நபர் ஒருவரின் வங்கி அட்டையை மோசடி செய்ததாக 24 வயது யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் 72 வயது நபர் ஒருவர் கிளிநொச்சியில் வசித்து வந்த யுவதி ஒருவருடன் முகப்புத்தகத்தில் பழகி வந்த நிலையில், குறித்த நபர் ஆஸ்திரேலியாவில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது யுவதியும் வவுனியாவிற்கு வருகை தந்து அவருடன் தங்கியுள்ளார். இருவரும் வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றிலும், குருமன்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றிலும் சில நாள்கள் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது குறித்த யுவதி ஆஸ்ரேலியாவில் இருந்து வந்த நபரின் கடனட்டையை பயன்படுத்தி வவுனியா பசார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் நகை கொள்வனவு செய்துள்ளார். சிறிது நாள்களின் பின் குறித்த நபர் ஆஸ்திரேலியா செல்ல ஆயத்தமாகிய போது அந்த யுவதியை அழைத்த போது அவர் கிளிநொச்சியில் இருந்து வரவில்லை. இதனால் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில், ஆஸ்திரேலியா சென்ற நபர் குறித்த யுவதி தனது வங்கி அட்டையை மோசடி செய்து நகைகளைக் கொள்வனவு செய்துள்ளார் என ஆஸ்திரேலியாவில் இருந்து வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது யுவதி கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05 - 100)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.06.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 26 வெள்ளிக்கிழமை 09.06.2023 கதிர் 81

## பதவி விலகினார் சரத் பொன்சேகா



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா தேசிய பாதுகாப்புதொடர்பான துறைசார்கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்பதவியில் இருந்து விலகியுள்ளார். 2

# பௌத்த பேரினவாதம் தமிழினத்தின் உரிமையை நசுக்குவதை கைவிடாது

## கஜேந்திரகுமாரின் கைது இதயே உணர்த்துகின்றது எனக் கண்டிக்கிறது யாழ். சிவில் சமூக அமையம்

இலங்கையின் பௌத்த பேரினவாதம் தமிழினத்தின் உரிமைகளை நசுக்குவதை இறுதிவரை கைவிடாது என்பதையே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினதும் அவரது கட்சியைச் சார்ந்தவர்களினதும் கைதுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்று கண்டித்துள்ளது யாழ். சிவில் சமூக அமையம்.

இது தொடர்பில் அந்த அமையம் விடுத்துள்ளஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினதும் அவரது கட்சிச் செயற்பாட்டாளர்களினதும் கைதுகள் மற்றும் அதனோடிணைந்த நிகழ்வுகள் இனரீதியான பழிவாங்கல் நிகழ்வுகளின் ஒரு அங்கமே என தமிழ் சிவில் சமூக அமையம் நிச்சயமாகக் கருதுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள், இனரீதியான ஒதுக்கல், பழிவாங்குதல் நிகழ்வுகள், அழிப்புகள் என பல்வேறு வகைகளில் கடந்த 75 வருடங்களாக இனவழிப்புக்குள்ளாகி வருகின்ற தமிழினத்துக்கு புதியதல்ல. எமது கண்டனங்கள் எவையும் இந்த நிலையை மாற்றப் போவதும் இல்லை. ஆனாலும் இந்தக் கைதுகளை தமிழ் சிவில் சமூக அமையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்படடுள்ளவர்களுக்கு தமது தார்மிக ஆதரவையும் தெரிவிக்க விரும்புகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்ற யதார்த்தம் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதிநிதித்துவ அரசியலின் போதாமையினைத் தமிழ் மக்களுக்கு ஞாபகமூட்டுவதாக அமைகின்றது.

தொடர்ந்து தமிழர் பிரதேசம் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளமையைக் கேள்விக்குட்படுத்தி வரும் கஜேந்திரகுமாரைக் கைது செய்தமையை தமிழ் சிவில் சமூகத்தினருக்கும் ஏனைய தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. இது தொடர்பிலும் தெற்கின் குறிப்பாக கொழும்பின் சிவில் சமூகம் பெரும்பாலும் வாய் மூடி மௌனிகளாக இருப்பது ஆச்சரியத்தைத் தராவிட்டாலும் தொடர்ந்து ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து இன்னும் மீளாத இந்தச் சந்தர்ப்பத்திற்கூட சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அரச இயந்திரமான சிறீலங்கா ஆட்சி தமிழினத்தின் உரிமைகளை நசுக்குவதை இறுதிவரை கைவிடாது என்பதை இந்தக் கைதுகளும் அதனோடு தொடர்புபட்டதான அண்மைய நாள்களின் நிகழ்வுகளும் மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களுக்கு நினைவூட்டுகின்றன.

சிங்கள பௌத்த நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய பிரதிநிதியாயிருப்பினும்கூட தமிழராயின் அவருக்கு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் அரசு எந்திரமான பொலிசாரால் மட்டுமல்ல நாடாளுமன்றத்தாலும் கூட வழங்கப்படமாட்டாது என்பதை நெற்றிப்பொட்டிலடித்தது போல இச்சம்பவங்கள் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளன..

நாடாளுமன்ற உறுப்பினராயினும் தமிழராயின் அவருக்கு தனது சொந்த மக்களைச் சந்திப்பதற்குக்கூட உரிமையுமற்ற நிலையே இத்தீவில் நிலவுவதும் அதுவும் விளையாட்டு உபகரணங்களை தான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு சாதாரண கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துவதாயின் கூட ஒற்றர்களும் உளவாளிகளும் உருமறைப்பில்வருவர் பதிவுகளை மேற்கொள்வர் அதன் வழி கலந்துகொண்டவர்களை அச்சுறுத்துவர், பழிவாங்குவர் என்ற தீவிர நிலையில்தான் தமிழர்களின் தாயகமுள்ளதுவும்அப்பட்டமாகஇந்தநிகழ்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2

---

தரம் 9 வரையான மாணவர்களுக்கு

## வெள்ளி, ஞாயிறு தினங்களில் ரியூசன்கள் நடத்த இனித் தடை

யாழ். மாவட்டத்தில் ஜூலை முதல் புது நடைமுறை





ஜூலை முதலாம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் ஒன்பதிற்குட்பட்ட மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் தனியார் வகுப்புக்களை நடத்துவதறகுத் தடை விதிப்பது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான ஒட்டு, உறவு பாதிக்கப்படுகின்றது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் சாதக மற்றும் பாதக விளைவுகளைக் கருத்தில் கொண்டு எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் தொடர்பாக யாழ். மாவட்டச் செயலகத்தில் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், நிர்வாகிகளுடன் இன்று நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் காலை 09 மணி தொடக்கம் 1 மணிவரை நடந்த கலந்துரையாடலில் சுகாதாரம், கல்வி, மதம், பொலிஸ், பெற்றோர் எனப் பல தரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர். 2

இன்றைய கலந்துரையாடல் நிறைவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

1. பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நடத்தப்படவேண்டும். தனியார் கல்வி நிலையங்களையும் இணைத்து இது மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு பிரதேச செயலக மட்டங்களில் முழு ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும்.

2. ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கான தனியார் கல்வி நடவடிக்கைகள் ஞா-யிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமை மாலையும் முழு மையாக நிறுத்தப்பட வேண்டும்.

---

## உடல் முழுவதும் காயங்களுடன் 5 வயது சிறுவன் சடலமாக மீட்பு!

பொலிஸார் தீவிர விசாரணை

முல்லேரியா-ஹல்பராவ பகுதியில் ஐந்து வயது சிறுவன் உடல் முழுவதும் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் சிறுவனின் சடலம் கிடப்பதாக 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அறி விக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே பொலி-ஸார் சிறுவனின் சடலத்தை மீட்டுள்ளனர்

குறித்தசிறுவனின்தந்தை பிறிதொரு திருமணம் செய்து கொண்டுவசித்துவருவதோடு, தாய் கூலித்தொழிலுக்காகச் செல்பவர் எனவும் பொலி-ஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுவரின் உடலில் கண்ணாடிப் போத்தல்களால் குத்தப்பட்ட காயங்கள் உள்ள நிலையில் அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது கண்ணாடிப்போத்தல்கள் உடைந்து அவரின் உடலில் குத்தியதால் அவர் மரணித்தாரா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவனின் உடலின் அருகில் வளர்ப்பு நாய்க்குட்டி அழுதவாறு படுத்திருந்த உருக்கமான சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

(02)

---

## கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை இலங்கை பாதுகாக்க அமெ. அழைப்பு

கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாக்குமாறு இலங்கைக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துச்சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஜனநாயகத்தின் அடிப்படையிலும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாப்பது, அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான, பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின்முயற்சிகளின் ஒரு மூலக்கல்லாகத் தொடர வேண்டும் என்று தூதுவர் ட்வீட் செய்துள்ளார்.

பௌத்தத்திற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாா எதிரிசூரிய கைது செய்-யப்பட்டமை மற்றும் அவருக்கு ஆதரவாக அவரது கருத்துக்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்த புரூனோ திவாகரா கைது செய்-யப்பட்டமைஆகியவற்றின் பின்னணியில் அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

---

குருக்கள் இடையிலான முரண்பாடுகளால்

## வீரமாகாளி அம்மன் ஆலய கொடியேற்றத்தில் குழப்பம்

நீதிமன்றம் தலையிட்டு குழப்புவோரைக் கைது செய்யப் பணிப்பு

ஆலயக் குருக்கள் இடையேயான பங்காளித் தகறாறில் யாழ்ப்பாணத்தின் பழம் பெருமைமிகு வீரமாகாளி அம் மன் ஆலய வருடாந்தத் திருவிழாவில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இன்று காலை 10 மணிக்கு நடந்திருக்கவேண்டிய கொடியேற்றம் இடம்பெறவில்லை. நீதிமன்ற உத்தரவை அடுத்து அது மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம், நல்லூர், அரசடி வீரமாகாளி அம்மன் ஆலயம் வரலாற்றுப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனான சங்கிலியனால் வழிபடப்பெற்றது என்கிற பெருமையையும் கொண்டது.

இந்த ஆலயத்தில் தொடர்ந்து பங்காளித்தகறாறு இடம்பெற்று வருகின்றது. ஆலயம் சட்ட ரீதியாக மூன்று குடும்பங்களுக்கு உரித்துடையதாக இருக்கின்றனர். எனினும் இந்தக் குடும்பங்களுக்கு இடையில் காணப்படும் தகறாறு காரணமாக அடிக்கடி இந்த விவகாரம் நீதிமன்றப் படியேறி வருகின்றது.

வருடாந்தம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொடியேற்றத்தை முன்னின்று நடத்தித் திருவிழாவைச் செய்யவேண்டும் என்று ஏற்கனவே நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. அதன்படி இந்த வருடத்தில் கொடியேற்றத்தைச் செய்-யவேண்டிய குருக்கள் அதனைச் செய்வதற்கு நேற்று ஆலயத்திற்கு வந்தபோது அவரைத் தடுத்து நிறுத்திய மற்றொரு குடும்பத்தினர் குழப்பம் விளைவித்துள்ளனர். ஆலய கர்ப்பக்கிரகத்தைப் பூட்டித் திறப்பை எடுத்துக்கொண்ட அவர்கள் அதனைத்தரமுடியாது என்று சண்டையிட்டுள்ளனர்.

இதனால் கொடியேற்றத்தை இம்முறை செய்ய வேண்டிய குருக்கள் பொலி-ஸாரின் உதவியை நாடினார். அவர்கள் வந்தபோதும் கர்ப்பக்கிரகத் திறப்பை 2

---

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து முடிவில்லை

நீதி அமைச்சர் திட்டவட்டம்

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சதெரிவித்துள்ளார். அது தொடர்பில்ஆளும்தரப்புக்குள் கலந்துரையாடல்கள்கூட நடக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கு-வதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்என்றுசிங்களப் பத்திரிகை ஒன்று கடந்த வாரம் வெளியிட்டிருந்த செய்தி தொடர்பாக நீதி அமைச்சரிடம் கேட்கப்பட்டபோதே அவரர் இதனைத்தெரிவித்திருக்கிறார். . சிங்களப் பத்திரிகை வெளியிட்ட தகவலின் உண்மைத் தன்மை குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இயங்கிவரும் பக்ட்ஸீக்கர் (தரவுசேகரிப்பவர்) அமைச்சர் விஜேதாச ராஜபக்விடம் வின வியபோது அப்படிப்பட்ட எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லைஎன்றுஅவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

# திருகோணமலை மாவட்ட கல்விப் பிரச்சினை சம்பந்தமாக ஆளுநருடன் இம்ரான் சந்திப்பு!



(ஹுஸ்பர்)

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, கல்விப்பிரச்சினைகள் சம்பந்தமாகவும் மற்றும் விரைவில் வழங்கப்படவுள்ள கல்வியியல் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் சம்பந்தமாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் சந்தித்து கலந்துரையாடினார்.

முக்கியமாக புதிதாக நியமனம் பெறும் கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை வெளி மாகாணத்துக்கு நியமனம் செய்யாமை உள்ளிட்ட விடயங்களை தெளிவுபடுத்தி ஆளுநரிடம் தெரிவித்தார். (05)

# உரத்தொழிற்சாலை முல்லையில் திறப்பு!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உடையார்கட்டு மூங்கிலாறு வடக்கில் உடையார் கட்டு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தின் இயற்கை உரத்தொழில்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உடையார் கட்டு விவசாயிகள் கூட்டுறவு சங்க தலைவர் யோகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கமலேஸ்வரன் கலந்து கொண்டார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரு மான தேவந்தினி பாபு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் ஜெயகாந்தனும் கலந்து கொண்டனர். இயற்கை உரத் தொழில்சாலையின் பெயர்ப் பலகையை கலந்து கொண்டிருந்த அதிதிகள் திரைநீக்கம் செய்து, தொழிற்சாலையைத் திறந்து வைத்தனர்.

இதன்போது இயற்கை உரம் எவ்வாறு தயாரித்தல் என்பது தொடர்பாக அதிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன் பொதி செய்யப்பட்ட இயற்கை உரம் சம்பிரதாயபூர்வமாக அறிமுகம் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதன்போது கலந்து கொண்டிருந்த அதிதிகளால் மரக்கன்றுகளும் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகம் எந்த அளவுக்கு உளவுப்படைகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது என்பதும் தமிழ் மக்களின் உரிமைக்கு விட்டுக் கொடாது குரல் கொடுப்பவர்கள் மீது சிறீலங்கா அரசின் படையக் கட்டுமானங்களும் சட்டங்களும் எவ்வாறு கொடூரமாகப்பாயும் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ்த் தேசத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள பேரினவாத அமைப்புகளைப் போல எவ்வாறெல்லாம் வெறுப்பையும் எதிர்ப்பையும் வெளிக்காட்டுவர் என்பதையும் இந்த நாள்களின் நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு மீள ஒரு முறை நிகழ்த்திக் காட்டுவனவாக உள்ளன.

சிறீலங்கா அரசின் 75 வருட நீதியற்ற காட்டாட்சியின் கீழ் தமிழ் மக்கள் எவ்வாறான இடத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள், எதனால் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டார்கள், எதனால் அவர்கள் தமக்கான நீதியை தீவிற்கு வெளியில் தேடுகின்றார்கள், தமக்கு 75 ஆண்டுகளாக இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் கொடூரங்கள் படுகொலைகளடங்கிய இனவழிப்புக்கு எதிராக எதற்காக சரவதேச விசாரணையைக் கோருகின்றார்கள் என்பவற்றுக்கான விளக்கமாக இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன.

சர்வதேச சமூகமும் தற்போதைய நிலைக்குக்கூட்டுப்பொறுப்பாளிகள்என்பதனை ஞாபகப்படுத்துகின்றோம். இலங்கை அரசு தொடர்பில் அவர்கள் கடைபிடிக்கும் மென் போக்கு தமது சொந்த தேசிய, புவிசார் நலன்களின் பாற்பட்டது மட்டுமே என்பதனை நாம் அறிவோம். அதற்கு அப்பால் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மானிட மாண்புகளைப் பேணல் என்பதெல்லாம் மேம்போக்கான பூசி மெழுகுதல்கள் மட்டுமே என்பதனையும் நாம் அறிவோம். எனவே தமிழ் மக்கள் தொடர்பிலோ, அவர்களது மனித உரிமைகள் தொடர்பிலோ தமக்கு அக்கறை இருப்பது போல் தழிழ் மக்களுக்கு போலி நம்பிக்கைகளை மட்டும் தருவதை தொடராது இனியாவது உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாம் சர்வதேச சமூகத்தை வினயத்துடன் வேண்டுகின்றோம்.

## வெள்ளி, ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 . தனியார் கல்வி நிலையங்கள், சுகாதார வசதியோடு வகுப்பறைப் பிரமாணக் கட்டடங்களுக்கமைய இருக்கவேண்டும்.

4. தனியார் கல்வி நிலையங்களை உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது, பிரதேச செயலகத்தில் பதிவு செய்திருத்தல் கட்டாயமாகும்.

5 . தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மிகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களைப் போதிக்கவேண்டும்.

6 . இந்தச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுதை அவதானித்து பிரதேசமட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் குழு உருவாக்கப்படவுள்ளது.

இத் தீர்மானங்களைப் பின்பற்றாத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.(03)

## பதவி விலகினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச இன்று சபையில் அறிவித்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார். (02)

# பரீட்சைக்குத் தோற்றிய கைதி தப்பியோட்டம்!

கொலை மற்றும் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவர் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விடையளிக்கும் போது சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாணந்துறை, தொடங்கஹவத்த-பெத்மேகமபிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

சாதாரண தரப் பரீட்சையின் இறுதி நாளானநேற்றுசிறைச்சாலைஅதிகாரிகளின் பாதுகாப்பில் பரீட்சை நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டார் என்று அப்பகுதியின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றும் போது மலசலகூடத்துக்குச் செல்ல வேண்டும் என்று சந்தேகநபர் மேற்பார்வையாளரிடம் தெரிவித்தார் எனவும், அதன்படி சிறைச்சாலைஅதிகாரிசந்தேகநபரைபரீட்சை மண்டபத்துக்கு அருகிலுள்ள கழிவறைக்கு அழைத்துச் சென்றார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது, சிறை அதிகாரியைத் தள்ளிவிட்டு அவர் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சப்புகஸ்கந்த பொலி-ஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சப்புகஸ்கந்த பொலிஸார் சிறுவனைக் கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# கடனாவின் இனப்படுகொலை முடிவை சவாலுக்குட்படுத்தவேண்டும் இலங்கை

## கொந்தளிக்கிறார் சரத் வீரசேகர

கனடாவின் இனப்படுகொலைப் பிரகடனத்தை இலங்கை நாடாளுமன்றம் சவாலுக்குட்படுத்தாவிட்டால் அது தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்தும் என்று கொந்தளித்துள்ளார் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான சரத் வீரசேகர. கனடாவின் பிரகடனத்திற்கு எதிராக இலங்கையின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் கடற்படைத் தளபதியான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையில் நேற்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முப்படையின் தலைமை அதிகாரிகள் புலனாய்வுப் பிரிவுகளின் பிரதான அதிகாரிகள், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்திலேயே சரத்வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதுஎன்றகனடாவின்பிரகடனத்தைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை அமைச்சரவையின் அனுமதியை பெற்று அயலுறவுத்துறை அமைச்சர் கொண்டுவரவேண்டும். இதுதொடர்பில் நான் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர திட்டமிட்டுள்ளேன்.

கனடாவின் நடவடிக்கைக்கு வெளிவிவகார அமைச்சர் கடும் கண்டனம் வெளியிட்டமை வரவேற்கத்தக்கது. கடந்த வருடம் கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அடிப்படையிலேயே கோட்டாபய ராஜபக்ச மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக பயணத்தடைகளை விதிக்கப்பட்டன. ஆதாரங்கள் அற்ற யுத்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கனடா விதித்துள்ள பயணத்தடைக்கு எதிராக இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் போரில் வெற்றிபெற்ற இராணுவத்தினருக்கு கடும் பாதிப்புகள் ஏற்படலாம்.

இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சவாலுக்கு உட்படுத்தாமல் தொடர அனுமதித்தால் அது தனிநாடு குறித்த கோரிக்கைகளை நியாயப்படுத்தும் நிலையை உருவாக்கும். இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை இழப்பார்கள். எதிர்காலப் போர்களில் அவர்கள் ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டங்களில் இலங்கை தவறாக கையாளப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளிடமிருந்து தப்பி இராணுவத்தினரிடம் அடைக்கலம் புகுந்தவர்கள் இனப்படுகொலை என்பது கற்பிதம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். ஆதாரமற்ற போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து வெளிவிவகார அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? ஒட்டாவாவில் உள்ள தூதரகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

வடக்கின் பாதுகாப்பை பணயம் வைத்து அங்கிருந்து இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்ககூடாது-என்றார்.

# வடக்கு காணி விடுவிப்புக் குறித்து நாடாளுமன்றில் கலந்துரையாடல்







## வீரமாகாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க மறுத்து ஏனையவர்கள் முரண்பட்டதை அடுத்து ஆலயத்தின் வெளிப்புற வாசலைப் பூட்டித் திறப்பை எடுத்துக்கொண்ட பொலிஸார் இன்று காலையில் நீதிமன்றத்தில் அதனை உரியவர் பொறுப்பெடுக்கும்படி தெரிவித்துச் சென்றுவிட்டனர்.

இதனால் இன்று காலை 10 மணிக்கு நடக்கவேண்டிய கொடியேற்றம் நடைபெறவில்லை. திருவிழாவைக் காண காலையில் ஆலயத்திற்கு வந்த பக்தர்கள் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

காலையில் ஆலயக் குருக்கள் அனைவரிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பொலிஸார் நண்பகலில் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி வழக்கைத் தாக்கல் செய்தனர். விசாரித்த நீதிவான் ஏற்கனவே தான் இட்ட கட்டளைப்படி இந்த வருடத்தில் கொடியேற்றத்தைச் செய்து திருவிழாவை நடத்தவேண்டிய குருக்களை அதனைச் செய்யும்படி பணித்ததுடன், அதற்கு இடையூறு விளைவித்து திருவிழாவைத் தடுப்பவர்களை உடனடியாகக் கைது செய்யும்படிம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இன்று மாலை 5.30 மணிக்குக் கொடியேற்ற முடியும் என்று குருக்கள் தெரிவித்ததை அடுத்து அதனைச் செய்வதற்கும் நீதிமன்றம் அனுமதியளித்தது. அதன்படி கொடியேற்றத்துக்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் போன்ற திணைக்களங்களினல் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. வனவளப்பாதுகாப்பு மற்றும் வன உயிரிகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாச்சி மற்றும் குறித்த அமைச்சுக்களின் அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே இந்தத் தீரர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு அவசியமாகவுள்ள உணவுப் பாதுகாப்பு, போாக்கு மற்றும் வாழ்வாதாரம் என்பவற்றை உயர்த்துவதற்கு வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பூர்வீகமான மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் விவசாய, நீர்வேளாண்மை உற்பத்திகளுக்கு ஏதுவான பிரதேசங்களும் விடுவிக்கப்படவேண்டும் என்று இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் மக்கள் குடியிருப்புக்களாகவும் விவசாய நிலங்களாகவும் விளங்கிய பிரதேசங்கள் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் அவை அனைத்தும் விடுவிக்கப்படவேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு சுட்டிக்காட்டினார்.

அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் கணிசமானவை விவசாய நிலங்களாகவும் குடியிருப்புக்களாகவும் இருந்தமைக்கான ஆவண ரீதியான ஆதாரங்களும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்டது.


வனப் பகுதிகளும் வனஜீவராசிகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கின்ற போதிலும், விவசாய மற்றும் நீர்வேளாண்மை உற்பத்தியின் அவசியம் கருதியும் மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், கணிசமானளவு காணிகளை விடுப்பதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அதேபோன்று, மன்னார் விடுத்தல்தீவு பகுதியில் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான இடங்களை விடுவிப்பதற்கு தேவையான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து அதனை விடுவிப்பதற்கான நடவடிகைகை மேற்கொளப்படும் என்று தெரிவித்துடன், கடற்றொழில் அமைச்சினால் நீர்வேளாண்மைக்கு அவசியானவை என்று கோரிக்கை முன்வைக்கப்பட்ட பகுதிகளுள் சிலவற்றுக்கான இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது, சுற்றாடல் அமைச்சின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வது பொருத்தமானது என்பதால், விரைவில் சுற்றாடல் அமைச்சு அதிகாரிகளையும் உள்ளடக்கிய கலந்துரையாடலை ஏற்பாடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சு மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஉயிரிகள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் ஆகியோருடன் யாழ். மாவட்ட மேலதிகச் செயலாளர் (காணி) எஸ்.முரளீதரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலர் (காணி) திருலிங்கநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மலையகத்தை மேம்படுத்த பிரான்ஸ் பங்களிப்பு தேவை

## அந்நாட்டு தூதரிடம் அமைச்சர் ஜீவன் வலியுறுத்து



மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்கள் எதிர்நோக்கும் போனை மற்றும் தற்சார்பு பொருளாதாரப்பிரச்சினைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம்தனதுபங்களிப்பைசெய்யமுன்வர வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டு தூதுவர் ஜோன் போன்ஷுவா பெக்டே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன் ஆகியோர் கொண்ட குழுவினரை கடந்த புதன்கிழமை கொழும்பில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளவை வருமாறு – இந்த நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் செய்து வரும்உதவிகளையும்அபிவிருத்திவேலைத்திட்டங்களையும் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் என்ற வகையில் அந்த மக்களின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளளேன்.

இதேவேளை தாங்கள் எமது மலையக மக்களின் அபிவிருத்திக்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், மலையகப் பகுதிகளில் பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதி உதவி உடன் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், போனை அபிவிருத்தி தொடர்பாகத் தாங்கள் பிரான்ஸ்தூதுவர்என்றவகையில்தங்களின் அரசின் வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரான்ஸ் அரசாங்கம் எமது நாட்டின் முதலீடுகளை மேற்கொள்ள ஆவணம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக, தான் பிரான்ஸ் நாட்டின் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக பெருந்தோட்ட

பகுதிகளில் பால் உற்பத்தி அதிகரிக்கும் சிறு மற்றும் நடுத்தர பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைமேற்கொள்ளவுள்ளதாகவும், நீர் வளங்கள் கொள்கை மறுசீரமைப்பில் தொழில்நுட்ப மற்றும் திறன்சார் ரீதியான உதவிகளை வழங்க இணக்கத்தை தன்னிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். (05)

# பழப்பயிர்ச் செய்கைக்கு நிதி ஒதுக்கத் திட்டம்!

## விவசாய அமைச்சு முன்னெடுப்பு

கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் மென்டரின் பழப்பயிர்ச்செய்கைக்காக நிதி ஒதுக்க கமத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் மன்டரின் தோடம்பழ வகைக்கு பெரும் கேள்வியுள்ள நிலையில், அவற்றை இறக்குமதிசெய்வதற்காகபெருமளவுஅந்நிய செலாவணி விரயமாவதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் புதிய பயிர்ச்செய்கைத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்துவதற்காக கமத்தொழில் அமைச்சில் நடத்தப்பட்ட கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் 2,407 மெற்றிக் தொன் தோடம்பழங்களை இறக்குமதி செய்ய ரூ. 496 மில்லியன் அரசாங்கத்தால் செலவிடப்பட்டது.

ஆனால் 2022 இற்கு முன்னர் இதைவிட அதிகளவு தோடம்பழம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2019 இல் 7,773 மெற்றிக் தொன் தோடம்பழ இறக்குமதிக்காக ரூ. 949 மில்லியன் செலவிடப்பட்டது. அதன்படி ரூ. 670 மில்லியன் மற்றும் ரூ. 735 மில்லியன் முறையே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட தோடம்பழங்களில் மன்டரின் இன தோடம்பழமே அதிகமானதாகும் என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் மன்டரின் பழ வகைகளை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி சிறந்த பெறுபேறுகளை அளித்துள்ளது. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி பதுளை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்கள் இப்பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாகும்.

இந்நாட்டில் விளைவிக்கக்கூடிய அனைத்து பயிர்களையும் பயிரிடுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மன்டரின் பயிர்ச்செய்கை தொடர்பான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இந்த வருடத்துக்குள் பயிர்ச்செய்கை வலயத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். (05)

# யாழில் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பாக விசேட கலந்துரையாடல்!

தனியார்கல்விநிலையங்கள்தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரனின் தலைமையில் இன்று(வெள்ளிக்கிழமை) காலை 09 மணி தொடக்கம் ஒரு மணிவரை குழுக்கலந்துரையாடல் ஒன்றினை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாள்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதால் மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகள் காணப்படுகின்றன.

எனவே அவை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் குறித்து மேற்படி கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் சுகாதாரம், கல்வித்துறை சார்ந்தோர், மதத்தலைவர்கள், பொலிஸார், தனியார் கல்வி நிலைய நிறுவனங்கள், பெற்றோஜுர், மாணவர்கள் போன்றோர் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# காட்டில் பயணிக்கவிருக்கும் பாதயாத்திரீகர்களுக்கு சித்தர்கள் குரல் சங்கர் ஜியின் அன்பு அறிவிப்பு

*( வி.ரி.சகாதேவராஜா)*

*இம்முறை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காட்டில் கதிர்காம பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி ஓர் அன்பான அறிவிப்பை விடுத்துள்ளார். அவரது அறிவிப்பில் -*

*கதிர்காம பாதை திறக்கும்போது யாத்திரை செல்லும் அடியார்கள் பிளாஸ்டிக் போத்தல் மற்றும் பொலித்தீன் கொண்டு செல்வதைத் தவிருங்கள்.*

*மீறி தேவை ஏற்படுத்தி கொண்டு வரும் சமயத்தில் அந்த அந்த இடத்திலேயே குப்பைகளை எரித்து விடுங்கள். இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு எமது உறவுகள்தான் அடியார்களாக செல்லப் போகின்றார்கள். அவர்களுக்கும் நாம் செய்வதை சொல்லிவிட்டால் அவர்களும் அதனை பின் தொடர்வார்கள்.*

*எமது நாடு, எமது பாரம்பரிய தெய்வீக சித்தர்கள் ரிஷிகள் உலா வரும் இடம். யாத்திரை எப்போது தொடங்கியது என்பது இதுவரை யாருக்கும் தெரியாது. தொடர்ந்து செல்கின்றோம்.*

*முருகனின் அருள் மட்டுமல்ல, அதிசயங்களும் நிறைந்த புண்ணிய பூமி. எவ்வளவோ நேர்த்திகள். அவ்வளவிற்கும் அங்குள்ள தெய் வங்களின் அருளாசிகள். காணக்கிடைக்காத அற்புதங்கள். வருகின்றவர்களின் எண்ணங்களை, கஷ்டங்களை நிறைவேற்றும் புண்ணிய தலத்தை கண்குளிர கண்டு*

*விடைபெறும் அமைதியே அமைதி ஒரு வருடத்தில் ஒருமுறைதான் வரு வதுண்டு.*

*அதனை நாமே சரியான பாதையில் ஒழுக்கநெறி தவறாது கடைப்பிடித்து செயற்பட்டால் இனிவரும் சந்ததியினரும் வழி தவறாது செயற்படுவார்கள். என்றுள்ளது. (05)*

# சாய்ந்தமருதில் மாபெரும் இரத்ததான முகாம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக சாய்ந்தமருதில் 'உதிரம் கொடுத்து உயிர்காப்போம்' எனும் தொனிப்பொருளில் யுஎஸ்எப் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் நாளை(சனிக்கிழமை) காலை 8.30 முதல் மாலை 3 வரை சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

' எவரொருவர் ஒரு மனிதனை வாழவைக்கின்றாரோ அவர் யாவரையும் வாழவைத்தவர் ஆவார்' என்ற அல்குர்ஆன் வசனத்திற்கு ஏற்ப இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இதில் கலந்து கொண்டு இரத்தானங்களை வழங்க முன்வருமாறு ஏற்பாட்டுகுழுவினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

ஆண், பெண் இருபாலாருக்கும் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் வாகன வசதி இல்லாதவருக்கு வாகன வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலதிக தகவல்களை அ.க. அன்வர்–0776655606,எ.எம்.சுஹான்–0752515453, ஏ.ஆர்.எம்.ஜப்ரான்–0757788902, எம்.எம்.றக்ஸான்–0767000661அழைத்து பெற்றுக்கொள்ளலாம். (05)

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் வேலைத் திட்டம் முன்னெடுப்பு!








வவுனியாவில் விசேட தேவைக்குட்பட்டோருக்கு புதிய முறையில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான தெளிவை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் இடம்பெற்றிருந்தது.

விஸ் அபிலிட்டி என்ற அமைப்பின் ஊடாக விசேட தேவைக்குட்பட்டோருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தி பலாபலன்களை அடையும்பொருட்டு அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

இதன் செயற்பாட்டு காட்சிப்படுத்தல் விஸ் அபிலிட்டி அமைப்பினூடாக வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மக்களுக்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

ஆடல் பாடலினூடாக விசேட தேவைக்குட்பட்டவர்கள்தமது அன்றாட செயற்பாடுகளினூடாக எவ்வாறு சமூகத்தில் ஏற்படும் எதிர்மறை வெளிப்பாடுகளின் கோபத்தை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை பயன் படுத்தி அறிதல் மற்றும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் இந்தச் செயற்பாடு அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விடைபெறும் நேரம் இது

காலைக்கதிர் பத்திரிகையை பசுமை ஊடக இல்லம் தனியார் நிறுவனம் 2020இல் பொறுப்பெடுத்து வாங்கியபோது ஒரு சோதனை முயற்சியாக மாலைப் பதிப்பைத் தொடங்கினோம். அதுவொரு நீண்ட மலைக்க வைக்கும் முயற்சி என்பது தெரிந்தே இருந்தது.

கொழும்புக்கு வெளியே யாழ்ப்பாணமே ஒரு வளமான, பிரகாசமான பத்திரிகைப் பண்பாட்டைக் கொண்டிருக்கின்றது. ஆனால் அவை எல்லாம் காலைத் தினசரிகளாகவே வந்து கொண்டிருக்கின்றன. காலைக்கதிரும்கூட காலைத் தினசரியாகவே வந்துகொண்டிருக்கின்றது. மாலைத் தினசரி ஒன்றைக் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட பல முயற்சிகள் முளையிலேயே கருகி இருக்கின்றன. அத்தகையதொரு பின்னணியில்தான் காலைக்கதிரின் மாலைப் பதிப்பை அச்சுவடிவத்தில் வெளியிடும் ஒரு மிகப் பெரும் முடிவை நிர்வாகம் எடுத்தது.

18 மார்ச் 2020 முதலாவது மாலை இதழ் எமது கைகளில் தவழ்ந்தபோது அது புத்துணர்ச்சியூட்டுவதாக இருந்தது. அதற்கு முன்னர் பத்திரிகை முகங்கொடுத்த பல்வேறு சவால்களுக்கும் மருந்திடுவதாக, புதிய உத்வேகத்தைக் கொடுப்பதாக அது அமைந்திருந்தது. மாலைத் தினசரியை வெற்றிகரமாக வெளியிடுவதற்கான பல திட்டங்களும் முன்யோசனைகளும் இருந்தன. தனியான ஒரு முழுப் பத்திரரிகையாகவே அதனை வளர்த்தெடுத்துச்செல்வதுதான் அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆனால், காலச் சூழல் அதற்கு ஒத்துழைக்கவில்லை. வெகு விரைவிலேயே கொரோனா – கொவிட் 19 – பெருந்தொற்று வந்து எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டது.

தொடர்ந்து பத்திரிகையை அச்சிட முடியவில்லை. அச்சிடுவதற்கான காகிதாதிகள் உள்ளிட்ட பெருட்களைத் தொடர்ந்து பெறுவதென்பதே நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற நிலை ஏற்பட்ட பின்னர் அச்சிடுவதை நிறுத்துவது என்று நிர்வாகம் முடிவு செய்தது. அது பெரும் வேதனை தருவதாக அமைந்திருந்தது. இருந்தாலும் அச்சிடுவதை மட்டுமே நிறுத்துவது, பத்திரிகையைத் தொடர்ந்தும் காலைக்கதிர் போன்றே எண்ணி (டிஜிட்டல்) வடிவில் – பிடிஎவ் இதழாக – வெளியிடுவது என்கிற முடிவுக்கு நிர்வாகம் வந்திருந்தது.

அன்று முதல் பல சவால்களுக்கு மத்தியில் கடந்த மூன்று ஆண்டுகளும் மூன்று மாதங்களுமாக காலைக்கதிர் அதன் மாலைப் பதிப்பைத் தொடர்ந்து வெளியிட்டு வந்திருக்கின்றது. பல செய்திகளைச் சுடச்சுட மாலைப் பதிப்பிலேயே வழங்கி வாசகர்களைப் பரவசப்படுத்தியிருக்கின்றது. இன்று ஒரு சில மணி நேரம் தாமதமாகினால்கூட, மாலைப் பதிப்பு வருமா என்கிற விசாரிப்புக்கள் நலாபுறமிருந்தும் பறந்து வருமளவிற்கு அதற்கென்றொரு எதிர்பாபர்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கின்றது.

என்னதான் வலைத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் தகவல்களை அறிந்துகொண்டாலும் அவை உண்மைதானா என்று காலைக்கதிரின் மாலைப் பதிப்பைப் பார்த்து உறுதிப்படுத்திக்கொள்ளும் ஒரு மரபு உருவாகியிருக்கின்றது. பொது நிகழ்வுகள், பொது இடங்கள், உறவினர், நண்பர்கள் வீடுகள், சில வேளைகளில் அரச அலுவலகங்களில்கூட என்று மாலை 5 மணி முதல் 7 மணிவரையான நேரத்துக்குள் மாலைப் பதிப்பு வந்ததும் தாங்கள் இருக்கும் இடத்திலேயே அதனை உடனடியாகப் பக்கம் பக்கமாக மேய்ந்துவிடும் பலரைப் பார்க்க முடிந்திருக்கிறது. எமது உழைப்புக்குக் கிடைத்த பயனாக அதனைத்தான் பெருமிதத்தோடு இன்றுவரை தலையில் ஏற்று வைத்துக்கொண்டிருக்கின்றோம்.

இப்போது காலம் மீண்டும் கனிந்திருக்கிறது. மாலைப் பதிப்பினை இன்னும் மேம்படுத்தி தொடக்கத்திலேயே திட்டமிட்டதைப் போன்று ஒரு தனியான முழுமையான பத்திரிகையாக ஆக்குவதற்கான காலம் இது என்று நினைக்கின்றோம். அதனால் காலைக்கதிரின் மாலைப் பதிப்புக்கு இன்றுதான் கடைசி நாள். நாளை முதல் மாலைப் பதிப்பு வெளிவராது. அதற்காகத் துவண்டுவிடாதீர்கள்.

பசுமை ஊடக இல்லத்தில் இருந்தே அதற்குப் பதிலீடாக மாலைக்கதிர் என்கிற புதிய பதிப்பு திங்கட்கிழமை முதல் உங்கள் கைகளில் தவழும். இளம் இரத்தங்களுடன், புதிய ஆசிரியர் பீடத்தின் கீழ், புது மெருகுடன் தனியான பத்திரிகையாக, தனித்துவத்தோடு அது இனி வெளிவரும். தொடக்கத்தில் கிழமை நாட்களில் மட்டும் வெளிவரவுள்ள மாலைக்கதிர் வரும் காலங்களில் வளம்பெற்று உங்களைப் பல்வேறு வழிகளிலும் மகிழ்ச்சிப்படுத்தும் புதிய பரிமாணத்தை எட்டும்.

காலைக் கதிர் வழக்கம் போலவே காலையில் உங்கள் கரங்களை வந்தடையும். மாலைப் பதிப்பின் பணிச்சுமை குறைவதன் காரணமாக, இனிமேல் காலையில் விடிவதற்கு முன்பே காலைக்கதிர் உங்கள் கைகளுக்குக் கிட்டும் என்று நம்புகின்றோம். கடந்த சில மாதங்களாக இருந்து வந்த தாமதம் நிவர்த்திக்கப்பட்டு இனி உங்களைத் துயிலெழுப்பும் ஒலியாக காலைக்கதிரின் புலன (வாட்ஸ்அப்) ஒலி மாற்றும் என்கிற நம்பிக்கையோடு விடைபெறுகின்றோம்.

இதுவரையில் காலைக்கதிரின் மாலைப் பதிப்புக்கு வழங்கிய அதே ஆதரவையும் அன்பையும் மாலைக் கதிருக்கும் வழங்குவீர்கள் என்கிற ஆசையோடு உங்களுக்கு விடைகூறுகின்றோம்.

நன்றி.

# டெங்கு பரவலுக்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர்மீது சட்ட நடவடிக்கை!

## கல்முனை மாநகர ஆணையாளர் எச்சரிக்கை

(ஏ.எம்.அஸ்லம்)

டெங்குநுளம்புபெருகுவதற்குஏதுவாக சுற்றுச்சூழலைவைத்திருப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும்என்றுகல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் டெங்கு ஒழிப்பு வார மூன்றாம் நாள் கொத்தணி சுத்திகரிப்பு வேலைத்திட்டம் மாநகர சபைக்குட்பட்ட சில பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டது.

இதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஆணையாளர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; –

நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வருவதை எல்லோரும் அறிவோம்.

எமது கல்முனைப் பிராந்தியத்திலும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல்கள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக கல்முனை மாநகர சபையால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு, வலய ரீதியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரதேசத்தில் மாநகர சபையின் 04 வலயங்களுக்குமான அனைத்து திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் ஆளணியினரும் ஒரு வலயத்தில் முழுமையாக களமிறக்கப்பட்டு, அந்த வலயத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள குப்பைகளை சேகரித்து, அகற்றும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஊடாக கல்முனை மாநகரை டெங்கு அற்ற பிரதேசமாகப் பாதுகாப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். இதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும்.

தற்போது இடம்பெறுகின்ற சுத்திகரிப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர் பொதுமக்கள் தமது வீடு, வளவுகளை டெங்கு பரவலுக்கு இடமளிக்காமல் தொடர்ந்தும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் பொது இடங்களில் குப்பை வீசுவதைக் கண்டிப்பாக தவிர்ந்துக் கொள்ள வேண்டும்.

இவற்றை மீறி, யாராவது டெங்கு பரவலுக்கு ஏதுவாக சூழலை வைத்திருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எமது கிழக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியிருக்கிறார்.

அதன்படி பொதுச் சுகாதார பரிசோதகர்களினதும் பொலிஸ் மற்றும் முப்படையினரதும் ஒத்துழைப்புடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். – என்றார்.

இந்த வேலைத்திட்டத்தின்கீழ் இஸ்லாமாபாத், கல்முனை தமிழ் பகுதி, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு மற்றும் மணற்சேனை பிரதேசங்களில் திண்மக்கழிவுகளும் டெங்கு நுளம்பு பரவலுக்கு ஏதுவான கொள்கலன்களும் சேகரித்து அகற்றபட்ட்டுள்ளன.

மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தி யோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், திண்மக்கழிவு முகாமைத்துவப் பிரிவு மேற்பார்வையாளர் எம்.அத்ஹம் மற்றும் வலய மேற்பார்வையாளர்களும் இப்பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர். (05)

# ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்!





கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஸ்கந்தபுரம் கிராம சேவகர் பிரிவில் ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசன திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், குறித்த ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசன திட்ட ஏற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், மாவட்ட அரசாங்க அதிபர்

திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் திட்ட பங்குதாரர்களின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி திட்டம் இயற்கையை மாசுபடுத்தாது, சூரிய சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்தி நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்பட்டு நீர்ப்பாசனம் செய்யப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகளின் சங்க நிதி சமூக அமைப்பிற்கு வழங்கி துறை சார்ந்த திணைக்கள கண்காணிப்புடன் இந் தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இன்றைய கலந்துரையாடலின் போது குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள தடைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதிலுள்ள கொள்ளல் நடைமுறை பிரச்சினைகள் தொடர்பாகத் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த கம்பனியை வரவழைத்து கலந்துரையாடி திட்டத்தை முன்னகர்த்துவதாகத் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், நெதர்லாந்தின் மனிதநேய செயற்பாடுகளுக்கான கூட்டுறவு சங்க உறுப்பினர், திட்ட பங்காளர்கள், ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசன கமக்காரர் அமைப்பின் அங்கத்தவர்கள், சிக்கன கூட்டுறவு சம்மேளன அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (05 - 113)

# எம்வி எம்பிரஸ் சொகுசுக் கப்பல் திருகோணமலையை வந்தடைந்தது!

(ஹுஸ்பர்)

இலங்கையை வந்தடைந்த இந்தியாவின் முதல் சர்வதேச கப்பல் பயணத்தை, இந்திய மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால கடந்த 5 ஆம் திகதி கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இதன்படி சென்னையில் இருந்து புறப்பட்ட எம்வி எம்பிரஸ் என்ற சொகுசுக் கப்பல் நேற்று (வியாழக்கிழமை) திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தை வந்தடைந்தது.

திருகோணமலையை வந்தடைய அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் செய்தமையுடன், அவர் தலைமையில், பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், திருகோணமலை கிழக்கு கடற்படை கட்டளை தளபதி, பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.

மேலும் அதில் வருகை தந்த பயணிகளுக்கு, திருகோணமலையில் காணப்படும் சுற்றுலா தளங்களை பார்வையிடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன. (05)

# விளையாட்டுத்துறைசார் தேவைகளை தீர்த்துவைக்க அங்கஜன் கோரிக்கை!

யாழ் மாவட்டத்தில் நிலவும் விளையாட்டுத்துறைசார் தேவைகளைத் தீர்த்து வைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேரில் சந்தித்து வலியுறுத்தினார். விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று (வியாழ்கிழமை) காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில், தற்போது யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் சாதிக்கும் இளைஞர் யுவதிகள் தொடர்பாக எடுத்துரைத்த அங்கஜன் இராமநாதன், அவர்களுக்கான பயிற்சி வசதிகள், வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க விளையாட்டுத்துறை அமைச்சு கவனமெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று (வியாழக்கிழமை) முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முகநூலில் படமொன்றை பதிவிட்டதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு தன்னை அழைத்து எச்சரித்ததுடன் அச்சுறுத்தும் வகையில் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செயற்பட்டார் என முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

*(05)*

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்




செ.ஜெபிசா
யாஃசென் சாள்ஸ் மகா வித்தியாலயம்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது ஆன்றோர் வாக்கு. கல்வி, பதவி, செல்வம் எல்லா உயற்சிகளும் ஒழுக்கத் திற்கு ஈடாக முடியாது. பணம் படைத்த செல்வந்தா பலர் ஒமுக்கம் ,ல்லாததால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு நிம்மதி இழந்து வாடுகின்றனர். ஒருவரது உயர்ச்சிக்கு காரணமாய் விளங்குவதே சிறந்த ஒமுக்கமே ஆகும்.

ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளலாம். ஒமுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தை அல்ல. மாறாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற் பண்புகளின் சோக்கையாகும். ஒமுக்கத்தை மாணவாகள் மத்தியில் வளாத்துக்கொள்ள அவாகளது பெற்றோர், ஆசிரியாகளின் பங்கு சமூகத்திற்கு முக்கியம். மாணவாகள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்காக சிறந்த பொழுது போக்கு இனிமையான சங்கீதம், விளை யாட்டுக்கள் போன்றவற்றில் ஈடுபடச்செய்தல் வேண்டும். ஒழுக்கம் ஒருவனது வாழ்வின் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்கிறது. ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் சமூகத்தில் ஒரு நல்ல பெயரை உருவாக்கலாம்.

மனிதனை வளாப்பது ஒழுக்கம், மனிதனை உயாத்துவது ஒழுக்கம். ஒழுக்கம் என்ற சொல் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்றது.. ஒழுக்கம் வேறு, தீய பழக்கம் வேறு.. கள் உண்ணல் முதலிய தீய பழக்கம், ஒழுக்கக்கேடு. ஒழுக்கம் - ஒழுகல், ஒருவருடன் மோதாமல், அவான் வாழ்வில் தலையிடாமல் ,ருப்பதே நல்லொழுக்கம் ஆகும்.

**உலகம் என்பது ஒழுக்கம்**
**சுய ஒழுக்கம் தீய ஒழுக்கம்: சுயநலம் அற்றதே நல்லொழுக்கம்**

என்கிறார் விபுலானந்தா. ஒழுக்கம் பொதுச்சுயநலம் எமது நாட்டின் குடிமைப் பயிற்சி மலிந்து வருகிறது. குடிமைப்பண்பு என்றால் என்ன? ஒரு நாடு ஒன்று கூடி வாழ்வதே குடிமைப் பண்பு. சாதி, மதம், மொழி, இனச்சண்டைகள் போடுதல் தீய ஒழுக்கமாகும். எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரு குலம் என்று வாழ்வதே நல்லொழுக்கம். நாம் சமூகம் மதித்துப் போற்றும் வகையில் வாழ வேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் உயாவாக மதித்துப் பேண வேண்டும். ஒழுக்கம் தானாக வருவதில்லை. நாம் தான் ஒழுக்கத்தை வளாத்துக்கொள்ள வேண்டும். மாணவாகள் மத்தியில் ஒழுக்கம் கட்டாயமானது. ஒழுங்காக பாடசாலைக்குச் செல்லல், பாடங்களை கவனமாகப்படித்தல், ஆசிரி யர்களுக்கு கீழ்படிதல், ஆசிரியாகள் தரும் வேலைகளை ஒழுங்காகச் செய்தல் போன்ற விடயங்களும் ஒழுக்கத்தி னுள் அடங்கும். மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கம் பேணப்படவேண்டும். மனிதன் மனிதனாக ,ருப்பதே தலைசிறந்த ஒழுக்கம்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான்**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**

என்பது வள்ளுவா வாக்கு. ஒருவனது வாழ்வின் உயாவை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்விற்கு சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே ஆகும் என்றால் அது மிகையல்ல. ,தனாலேயே வள்ளுவா ஒல்காப் புகழ் மிகு தொல்காப்பியரும் உலகம் என்பது உயாந்தோர் மாட்டே என்கிறார். ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் ,ல்லையென்றால் உயாவும் சிறப்பும் இல்லாமல் போகிறது. ,தனை நன்கு எம் உள்ளத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

ஒழுக்கம் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ வேண்டும் என்பது நம் , இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் வாழ வேண்டுமாயின் வாழும் போதே மேன்மையான வாழ்வை வாழவேண்டும். ,ந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாக வரும்.




இதனையே வள்ளுவா ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை எனக் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவா கூறியபடி ஒழுக்கத்ததை கடைப்பிடிக்க வேண்டும். ஒமுக்கத்தை கடைப்பிடிப்பதால் எமது வாழ்வில் நன்மைகள் பல சேரும். ஒழுக்கம் இன்றி வாழ்வதால் பல தீமைகள் வந்து சேரும் என்று வள்ளுவர் உணாத்துகிறார். ஒழுக்கத்தை கட்டாயம் கடைப்பிடித்து வாழ்வில் முன்னேற முயற்சிப்போம்

பொருளீட்டுவது எமது நோக்கமாயினும் ,தன் மூலம் புகழீட்டுவதே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும். பொருள் வழியே புகழ்வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரைப்போல உயர்வாக மதித்துப் பேண வேண்டும். இதனையே வள்ளுவர் ஒழுக்கம் ஒல்கர் உரவோர் என்கிறார். ஒழுக்கம் நிச்சயம் உயர்வழிக்கும். நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும் என்பது முதுமொழி. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம் இடும்பை தரும் என வள்ளுவா கூறுகிறார். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர் தலையில் இழந்த மயிரனை ஆகிடுவா என ஒழுக்கத்தைப் பேணிக் காக்கவேண்டும்.

ஒழுக்கத்தால் சிறந்து விளங்குவோர் பலர். புத்தர், யேசு, காந்தி போன்றவாகளின் வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்போமாயின் அவாகள் ஒழுக்கத்தால் உயாந்து நிற்பதைக் காணலாம். நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும், நான் மகிழ்ந்து விட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் போன்றவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலை யில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயிலவேண்டுமென மாணவாகளுக்கு உபதேசித்தார் காந்தி அடிகள். அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக பேணிக்காத்ததன் மூலம் இன்று உலகத்தோரால் மகாத்மா எனப் போற்றப்படுகின்றார். ஒவ்வொரு துறையிலும் உயாந்து விளங்கும் உத்தமாகளின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப்போமாயின் அவாகள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் எமது வாழ்வு வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்.

> ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளலாம். ஒமுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தை அல்ல. மாறாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற் பண்புகளின் சோக்கையாகும். ஒமுக்கத்தை மாணவாகள் மத்தி யில் வளாத்துக்கொள்ள அவாகளது பெற்றோர், ஆசிரியாகளின் பங்கு சமூகத்திற்கு முக்கியம். மாணவாகள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்காக சிறந்த பொழுது போக்கு இனிமை யான சங்கீதம், விளை யாட்டுக்கள் போன்றவற்றில் ஈடுபடச்செய்தல் வேண்டும். ஒழுக்கம் ஒருவனது வாழ்வின் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்கிறது. ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் சமூகத்தில் ஒரு நல்ல பெயரை உருவாக்கலாம்.



# சீப்பை ஒளித்து வைத்தால்...

என் சத்திய மூர்த்தி



ஐரோப்பிய கண்டத்தில், நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தேறிய பிரெஞ்ச் புரட்சியோடு கூறப்படும் ஒரு வசனம் உண்டு. 'உனது கருத்தை நான் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், அதனை கூறுவதற்கு உனக்கு இருக்கும் உரிமையை நிலைநாட்ட எனது உயிரையும் கொடுப்பேன்.' (Voltaire: I may not agree with what you say, but I will defend to death your right to say it.)

வால்டேரின் இந்த சொல்லடல், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது நிலைமைக்கு சரியாக பொருந்தும். அவரது அரசியலும், இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் அவரது விடாபிடியான அதிலும் களநிலைக்கு ஒவ்வாத வாதங்களை பலரும் ஏற்றுக்;கொள்ளவில்லை. அதே சமயம், விடுதலை புலிகள் அமைப்பின் அரசுக்கு எதிரான போருக்கு ஆதரவு தொவிக்காத அவர், பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வு ஏற்படும் என்பதில் திடமாக இருந்தார்.

### அதுவல்ல பிரச்சினை

இன்று அதுவல்ல பிரச்சினை. கஜன் பொன்னம்பலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே அரசின் பொலிஸ் கைது செய்தது தான் பிரச்சினை. இந்த விடயம் ஜனாதிபதிக்கு தெரியாமல் நடந்திருக்கலாம். தெரியாமலே இருந்திருக்கலாம். உண்மை நிலைமை அவ்வாறு இருந்திருந்தால், அது இந்த அரசு இயங்கும் இலட்சணத்திற்கு அத்தாட்சி.

அந்த விதத்தில், கஜன் கைது குறித்து, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா பாராளுமன்றத்தில் கூறியது குறிப்பிடத்தக்கது. 'பொன்னம்பலத்தின் கொள்கைகள் எங்களுக்கு ஏற்புடையதல்ல. ஆனால் அவர் பாராளுமன்றம் வந்து தனது நிலைமையை எடுத்துரைக்க உரிமை உண்டு,' என்று சாரப்படும்படி சஜித் கூறினார். இதே தொனியில் அவரது கட்சியின் பல்வேறு உறுப்பினர்களும் பேசினார்கள்.

இவை அனைத்தும் அவர்களது அடிமனதின் வெளிப்பாடா, அல்லது ரணிலை தாக்குவதற்கு கிடைத்த சான்ஸை விட்டுவிடக்கூடாது என்ற அரசியல் கட்டாயமா, என்று தெரியவில்லை. அண்மை காலங்களில், தமிழர் தலைவர்களில் கஜன் பொன்னம்பலம் மட்டுமே, சஜித் அணியிருடன் ஐக்கியமாகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்கட்சி உறுப்பினர்களை தொடர்ந்து கருத்து தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தனே, பாராளுமன்றம் பொலீஸின் பணிகளில் தடையோ குறுக்கீடோ செய்யமுடியாது என்று கூறினார். பொன்னம்பலம் விடயத்தில் அவரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திவிட்டு பொலிஸார் அவரை பாராளுமன்ற நடவடிக்கையில் ஈடுபட அனுமதிப்பார்கள், என்றும் அவர் கூறினார்.

அவ்வாறே, கிளிநொச்சி நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட பொன்னம்பலம், ஐந்து இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதில், கிரிமினல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரை கூட பிணையில் விடுவதற்கு, பண ஈடு கட்டாயமா, என்பதை பாராளுமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்.

பிரச்சினையே அங்கு தான் ஆரம்பமாகிறது. கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தும் அளவிற்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் என்ன கொலை குற்றமா செய்தார்? அதுவும் குறிப்பாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரை, பொலிஸார் அவசரஅவசரமாக தலைநகர் கொழும்புவிற்கு சென்று அந்த கைது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் தான் என்ன?

அது வெறும் சம்பிரதாயமான கைது என்று மட்டும் அரசு பசப்பிவிடக்கூடாது. அவ்வாறானால், குறிப்பிட்ட வழக்கில் தன்னை பொது மக்கள் மத்தியில் ஒரு பொலிஸ் அதிகாரி துப்பாக்கியால் சுட்டுவிடுவதாக பொது வெளியில் மிரட்டினார் என்பது குறித்து அதே பொலிஸ் துறை என்ன செய்துள்ளது? அந்த அதிகாரியையும் அந்த வழக்கில் சம்மந்தபட்ட பிற பொலிஸாரையும் கூட கைது செய்தார்களா என்ன?

### உளவுதுறை அதிகாரிகள்

நடந்தது என்ன? பொன்னம்பலத்தின் அணியினரின் போராட்ட களத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பொலிஸ் உளவுதுறை அதிகாரிகள் இருவர் ஊடுருவி இருந்தனர் என்றும், அவர்களிடம் கேள்வி எழுப்பியபோது, தங்களது அடையாள அட்டையை காண்பிக்கவில்லை என்பதும் குற்றச்சாட்டு. ஏன், அவர்கள் பொலிஸ் சீருடை அணிந்திருக்கவில்லை என்றும் முதல் நாளே கூறப்பட்டது.

கஜேந்திர குமாரின் ஆதரவாளர்களால் சூழப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை 'மீட்டெடுக்க' மேலும் சில பொலிஸார் அங்கு வந்தடைந்தனர் என்றும் அவர்களில் ஒரு அதிகாரி, இரு தரப்பு விவாதத்தின் போது, தனது சர்வீஸ் ரிவால்வரை எடுத்து பாராளுமன்ற உறுப்பினரை சுட்டுவிடுவதாக மிரட்டினார் என்பதும் கூட குற்றச்சாட்டு. அதற்கு பதில் குற்றச்சாட்டாக, எம்பி, அந்த அதிகாரியை தாக்க முயன்றார் என்று கூறப்பட்டது. குறிப்பிட்ட செய்தி சில மணிதியாலங்கள் சென்ற பின்னரே வெளிவந்தது என்று தெரிகிறது.

இது குறித்து, கிளிநொச்சி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிப்பதற்கு, கஜேந்திரகுமாருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அது என்ன அரெஸ்ட் வாரண்டா, என்பது தெரியவில்லை. இடையில், அவர் வெளிநாட்டிற்கு தப்பிசெல்ல முயல்வதாக புரளி கிளப்பப்பட்டது. அது உண்மையா என்பது ஒருபுறம் இருக்க, தனி நபர் ஒருவர், அதுவும் அடையாளம் தெரிந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறு தப்பிசெல்வதை தடுப்பதற்கு வேறுவித நடவடிக்கைகள் இல்லையா? குறிப்பாக, கொழும்பு மற்றும் பலாலி விமானநிலையங்களை 'அலர்ட்' செய்திருந்தால் போதுமானதாக இருந்திருக்குமே?

### ஆதாரங்களை அழிக்க...

இந்த கைது நடவடிக்கைக்கு கொழும்பு அரச தலைமையின் ஆதரவும் ஆசிர்வாதமும் இருக்கிறதா, என்பது தெரியவில்லை. ஆனால், இந்த கைது நடவடிக்கையின் மூலம் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை ஒரு பொலிஸ் அதிகாரி சுட முயன்றார் என்ற குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை அழிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறதா, என்பதே கேள்வி.

இடைப்பட்ட நேரத்தில், கஜேந்திரகுமார், தன் மீதான தாக்குதல் குறித்து பாராளுமன்றத்தில் உரிமைமீறல் பிரச்சினை எழுப்ப இருந்தார். அதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னரே அவர் கைது செய்யப்பட்டார். இது என்னவோ, சீப்பை ஒளித்து வைத்தால், கல்யாணத்தை நிறுத்திவிடலாம் என்ற அளவிற்கு அரச தரப்பில் யாரோ ஒரு பிரகஸ்பதி நினைத்துவிட்டார் என்பதையே காட்டுகிறது.

ஆனால் நடந்தது என்ன? எங்கோ, தமிழர் அரசியலில் ஒரு சிறு துளியாகவே பார்க்கப்பட்டு வந்த கஜன் மீதான பொலிஸ் கெடுபிடி திடீரென பாராளுமன்றத்தில் ஒரு முக்கிய பிரச்சினையாகவே கருதப்பட வேண்டிய சூழலை அவர்களே உருவாக்கி விட்டனர். கஜன் மட்டுமே பேசி முடிப்பதுடன் முடிவிற்கு வந்திருக்கம் உரிமை மீறல் பிரச்சினையும் இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாகவே பாராளுமன்றத்தில் கருதப்படும் ஒரு அலகாகி விட்டது. முக்கியமாக பேரினவாத சிங்கள எம்பிக்கள் தவிர யாரும் அதனை கண்டுகொண்டிருக்க மாட்டார்கள்.

பெரிய சரித்திரம் கொண்ட இனப்பிரச்சினையில் இந்த ஒரு நிகழ்வு ஒன்றும் இல்லாத விடயம் தான். ஆனால், தற்போதைய சூழலில் இதனை முற்றுப்பெறாத மேலும் ஒரு புள்ளியாகவே கருத வேண்டும். அதற்கான கட்டாயத்தை பொலிஸ்துறையினரே ஏற்படுத்தி விட்டனர்.

மூன்றாவது தலைமுறை

யார் கஜன் பொன்னம்பலம்? தமிழர் அரசியலை பொறுத்த வரையில், முதன்முதலில் உருவாக்கப்பட்ட தமிழ் காங்கி ரஸ் கட்சியின் தற்போதைய தலைவர். ஒரு பாரம்பரியமிக்க அரசியல் குடும்பத்தின் மூன்றாவது தலைமுறை வாரிசு. அரசையும் பொலிஸாரையும் ஏன் இராணுவத்தினரையும் பொறுத்தவரையில், வன்முறையில் ஈடுபடாத அந்த தலைமுறையினரில் ஒரு சில தமிழ் தலைவர்களில் அவரும் ஒருவர்.

இவ்வாறு பாசிட்டிவ் ஆகவே அறியப்படும் ஒருவரை கைது செய்யும் போது, தமிழர் மத்தியில் அது எந்தவித தாக்கத்தை ஏற்படுத்தும் என அரச தரப்பு ஏன் எண்ணிப்பார்க்கவில்லை? இன்னும் சொல்லப்போனால், தற்போதைய தலைமுறையில், தமிழ் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் எந்த ஒரு தலைவர் பின்னாலும், கண்மூடிதனமாக செல்வதில்லை. அது அந்த தலைமைகளுக்கும் தெரியும்.

கஜனோடு பொலிஸார் கைகலப்பில் ஈடுபட்ட அந்த நிகழ்வில் கூட, அவரது தொண்டர்கள் அதிக அளவில் இருந்தார்கள் என்றோ, அதன் காரணமாக பாதுகாப்பிற்கு சொற்ப எண்ணிக்கையிலேயே வந்திருந்த பொலிஸாரை திணறடித்தார்கள் என்றோ, பொலிஸே கூறவில்லை. பகடி சொல்ல வேண்டுமானால், தங்களது நடவடிக்கைகளால், பொலிஸே, கஜன் பொன்னம்பலத்தை பெரிய தமிழ் தலைவராக, எதிர்கால நம்பிக்கை நட்சத்திமாக காட்டுவதற்கு துடிப்பதாகவே கருத வேண்டும்.

### அடுத்தது என்ன?

கஜன் கைது நடவடிக்கைக்கு எதிராக பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சாணக்கியன் உரக்க குரல் கொடுத்துள்ளார். அதற்கு முன்னரே, அவரை பொலிஸார் மிரட்டியமைக்கு சித்தார்த்தன், சிறீதரன் போன்ற தமிழ் எம்பிக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது விடயம் குறித்து, பின்னர் நடந்த தமிழரசு கட்சியின் தலைமைத்துவ கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா என்பது குறித்து தெரியவில்லை. என்றாலும், அவரது கைது நடவடிக்கை எல்லாம் தமிழரசு கூட்டத்திற்கு பின்னரே அரங்கேறியது என்பதும் குறிப்பிடதக்கது.

தற்போது, தமிழர் அரசியல் மற்றும் சமூக தலைமைகள் முன்னால் இருக்கும் கேள்வி இது தான். இப்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நடந்தது அவர்களில் எவருக்கும் நடக்கலாம். இப்போது வாளவிருந்துவிட்டு, பின்னொரு காலத்தில், 'குத்றான், வெட்றான்' என்று கூக்குரலிடுவதில் அர்த்தம் இல்லை.

கொள்கை ரீதியாக தமிழர் கட்சிகளிடையே சில முக்கிய வேறுபாடுகள் இருக்கின்றன. அதைவிட, தனிநபர் கொளரவ பிர்சினைகளும் அதிகம். அதீதம். இது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாட்டனார் காலம் துவங்கி, அவரது தந்தை காலத்தில் தொடர்ந்து இப்போதும் நிலைபெற்றுள்ள விடயம்.

'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதையாக, இனப்போரில் எல்லாவற்றையும் இழந்த பின்னரும் சுய கௌரவம் என்ற பெயரில் வறட்டு கௌரவத்தை யாரும் விட்டுவிடவில்லை.

குறிப்பாக, தனி நபர் தலைமைகளே சுயநலவாதத்திற்கு இனச்சாயம் பூசும் விளையாட்டும் இன்னமும் தொடருகிறது.

அதற்காக இனப்பிரச்சினை இல்லை என்பதல்ல பொருள். மாறாக, இனப்பிரச்சினை என்று துவங்கிவிட்டு அதனை தனிநபர் கௌரவத்திற்காக கால் மாற்றி விடுவது தான் பிரச்சினையே. இந்த வாரம் நிகழ்ந்தேறிய தமிழரசு கட்சியின் தலைமைத்துவ கூட்டத்தில் நடந்தேறியதும் அது தான்.

தற்போதைய சூழலில், தங்களை மட்டுமே முன்னிலை படுத்தி அரசியல் செய்வதை தமிழ் தலைவர்களும் ஏன் அரசியல் கட்சிகளும் கூட நிறுத்திக்கொண்டு. பரந்துபட்ட ஒரு செயல்திட்டத்தின் அடிப்படையில் ஒத்துழைப்பதற்கு முன் வரவேண்டும். இதில் தமிழரசு கட்சி எந்த அளவிற்கு 'தியாகம்' செய்கிறதோ, அதே அளவிற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்ற தலைவரும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டிவரும்.

இந்த இரு துருவங்களுக்கு இடையில், இருக்கவோ இருக்கிறார்கள், செல்வம் அடைக்கலநாதன், ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமசந்திரன் வகையாறாக்கள்!



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2023 இல் வெளியிடப்பெற்றது.